


இலக்கிய
மாத இதழ்

ஐப்பசி '97

திருமாவளவன்

புலரிப் பொழுதில் புறப்பட்ட
பயணம்
கூடு திரும்பவில்லை

வழிகாட்டிகளெல்லாம் தறிகெட்டலைய
சூரியனைக் குறிவைத்து
நகர்த்திய தேடல்
தரிப்பின்றித் தொடரும்
படுவான் திசைபார்த்து



காட்டில்,
கடல் வெளியில்,
கரிசல் பூமி அகதி முகாங்களில்,
முகமிழந்த கடவுச்சீட்டில்,
சரக்குக் கப்பலின் அணியக்கிடங்கில்,
பனியில்,
பனிநிறை புலத்தில்,
துருவக்கொடுங் குளிரில்.

இவைகள்
தரிப்புகள் அல்ல
தடயங்கள்

எப்போது நான் வீடுசேர்வேன்
இப்போது சூரியனைத்தேடியபடி

**முகரம் 4**
**ஆக்கமும்**
**தொகுப்பும்:-**
முகரம் ஆசிரியர் குழு

**உள்ளே:-**
வ. ந. கிரிதரன்
சக்கரவர்த்தி
D.B.S. ஜெயராஜ்
என். கே. மகாலிங்கம்
யோகி
ஞானம் லெம்பேட்
கலாதரன்
ஜோ. அமல்ராஜ்
குமார் மூர்த்தி
வினோதகன்
பிரதீபா
சிந்து

**இவர்களுடன்**
பொ. விவேகானந்தன்
திருமாவளவன்
அ. கந்தசாமி

**ஓவியம்:**
கருணா

**முகப்போவியம்:-**
அ. மாற்கு

**வெளியீடு:**
முகரம் வெளியீட்டு
நிறுவனம்



**25, Dowswell Dr**
**Scarborough, Ontario**
**M1B 1H5**
**(416) 412-1951**
**(416)694-4304**
**(416)261-6123**


ஈழத்துப் படைப்பாளிகள் பலரும் கலை இலக்கியச் சுயங்கள் காயடிக்கப்பட்டு கட்டாக்காலிகளாய்த் திரிந்த காலம் ஒன்றிருந்தது. தென்னிந்திய மழை முகில்களை நம்பியே நம் தேசத்து இலக்கியக் காளான்கள் குடைவிரித்த காலம் அது.

தென்னிந்தியாவே தாய்நாடு எனும் நம்பிக்கையில் தளராத ஒரு சாலை மாணாக்கர் இன்றும் நம்மோடு வாழ்வது பற்றி ஒளித்துப் பிடிக்க வேண்டியதில்லை. தென்னிந்தியத் தரமான இலக்கிய வரவுகளினால் தம்மை அகலித்துக் கொண்டவர்கள் ஈழத் தமிழர்கள் என்பது ஒன்றும் சங்கை கெட்ட விஷயமல்ல.

மணிக்கொடியைப் போன்ற ஒரு மைல்கல் ஈழத்து இலக்கிய உலகில் இனிமேல்தான் ஊன்றப்படவேண்டும் என்கின்ற உறுத்தலும் மறுதலிக்கப்படக் கூடியதல்ல. ஆனாலும் பல துறைகளிலும் ஆரம்பங்களை கண்டவன் ஈழத் தமிழனே என்ற உண்மை வசதியாக மறக்கப்பட்டு வருகிறது.

தொல்காப்பியம், கலித்தொகை, வீரசோழியம், சூளாமணி.... போன்ற செல்லரித்துப் போன சுவடிகளை ஊரூராய்த் தேடி அலைந்து அச்சேற்றி சங்க இலக்கியத்தை சாதாரணர்கள் பார்வைக்கும் கொண்டு வந்தவன் ஈழத்தமிழன் சி.வை.தாமோதரம்பிள்ளை.

இதன் பின்னரே தமிழ்நாடு சங்க இலக்கியத்தை வைத்து அரசியல் நடத்தத்தொடங்கிற்று.

ஆறுமுகநாவலரின் பங்களிப்போடு முதல் விரிவான தமிழகராதியை யாழ்ப்பாணம் கண்டது. அதன் பின்புதான் பல தமிழகராதிகள் தமிழகத்தில் அவசரத்தோடு அச்சுவாகனமேறின.

தமிழகத்தில் ஆங்கிலப் பத்திரிகைகளே வெளிவந்த காலத்தில் 'உதயதாரகை' எனும் முதல் தமிழ் பத்திரிகை ஈழத்து மண்ணில்த்தான் உதயமாகியது.

முதல் தமிழ்க் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணி ஈழத்தமிழ்ப் பரப்பில்தான் பதியப்பட்டது

மேற்குலகின் முதல் தமிழ்ச் சஞ்சிகையான "லண்டன் முரசு" ஒரு ஈழத்தவனின் முயற்சி.

உலகத் தமிழ் ஆராச்சி நிறுவனத்தை ஸ்தாபித்தவன் ஈழத்தமிழன்

நாயக்கர் காலத்தோடு புறத்தை புறம் தள்ளி அகத்தோடு தமிழகம் அக்கியப்பட, புறத்திற்கு புதிய புறநானூறு படைத்துக் கொண்டிருப்பவனும் ஈழத்தமிழன் தான்.

"உலகத் தரத்திற்கு இலக்கியங்கள் தரப்போபவனும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழன்தான்" என்ற எம் முன்னோடி எஸ். போ வின் கூற்று வெறும் உயர்வு நவிர்ச்சி அல்ல. எதிர்வரும் சாலையின் திருப்பத்தில் ஏற்படப்போகும் சரித்திர நிகழ்வு.

# விளங்கிக்கொள்ள ஒரு கவிதை

யாராவது உங்களின்
விடிவிளக்கின் வெளிச்சத்தில்
சிறிதளவை
இரவலாய்த் தருவீர்களா?

இறுக்கமான வினாடிகளின் சந்நிதியில்
அசிங்கமாகத் தொனிக்கும்
இணக்கமற்ற கோரிக்கையைப்
பொறுத்தருள்க.

இளவரசி ஒருத்தியின்
துன்ப விளக்கில் கசியும்
சோக ரேகைகளே உங்களின்
சுமையாய்ப் போயிற்று

வழிதவறிப்போன பறவைகளின்
அந்தரிப்பும், அவலமுமே
நித்தியமாய்ப்போன தலைமுறைபற்றி
ஆண்டைகள் அறிந்திருக்க நியாயமில்லை

மன விகாரங்களின் ஒட்டடைகளில்
தொலைந்துபோன பட்டாம்பூச்சி
சிறகடித்து செய்யும் இம்சை
தாங்கிக் கொள்ள முடியாத
சோகம்தான், எனக்கும்.

என்றாலும்,
கொல்லப்படுவதற்குக் கூட
தோட்டாக்கள் தொலையாமல்
சுவாசம் தேடியபடி
மனிதர்கள் என் மண்ணில்
இன்னும் உயிரோடு

ஒரு மின்மினியின் வெளிச்சத்தையேனும்
கைமாற்றாய்த் தாருங்கள்
கசங்கிய வாழ்வுகளின்
கதைகளை அலம்பிக் கொள்ள
ஊசிமுனை அளவு
ஒளிப் பொட்டு
இரவலாக......

பிரதீபா

# கிரீஷ் கர்னாட்டின் நாகமண்டல

**என். கே. மகாலிங்கம்**

பகலில் கணவனுக்கு உணவு சமைத்துக் கொடுக்கிறாள் புது மனைவி ராணி. அவன் ஓர் அந்நியன் போல பூட்டிக் கிடந்த கதவைத் திறந்து உள்ளே வந்து சாப்பிட்டு விட்டு அவளுடன் அதிகம் பேசாது அவளைக் கடுமையாக நடத்திவிட்டு அவளை வீட்டுள் திரும்பவும் பூட்டி வைத்துவிட்டு வீட்டை விட்டுப் போகிறான். இது தினமும் நடக்கிறது. இப்படிச் சிறை வைக்கப்பட்டிருக்கும் ராணி நீண்ட இரவுகளில் தனிமையில் தவிக்கிறாள். நாய் குரைப்பதைக் கேட்டுக் கூட பயப்படுகிறாள். தன் இளமைக்கால நினைவுகளை அவளே எங்களுக்குச் சொல்கிறாள். தனிமை அவளைப் பேதலிக்க வைக்கிறது. மனிதஸ்பரிசம், அன்பு அவளுக்குத் தேவைப்படுகிறது. அப்போது நாகபாம்பு ஒன்று கணவனைப் போல அவள் முன்னே தோன்றுகிறது. இவளைப்பற்றி அன்புடன் அனுதாபத்துடன் கேட்கிறது. அது அவளுக்கு மேலும் பல சிக்கல்களைக் கொண்டு வருகின்றது. இரவில் வரும் நாகபாம்பு அவள் கணவனாகவே அவளுக்குத் தோன்றுகிறது.. நாகபாம்பு கணவனாக வருகிறதா? அல்லது கணவன் நாகபாம்பாக வருகின்றானா என்ற மயக்கம் எங்களுக்கு. ஆனால் அவளுக்கு அது கணவன். அந்தச் சிக்கலை அவளால் அவிழ்க்க முடியவில்லை. இருந்தாலும் அவள் "கணவனால்" அல்லது இரவில் வரும் நாகபாம்பால் கர்ப்பம் அடைகிறாள். கணவன் பிறக்கப் போகும் குழந்தை தன்னுடையது இல்லை என்று கூறுகின்றான். அது எப்படி என்பது அவளுக்குப் புரியவில்லை. நாகபாம்பிடமே அதைக் கேட்கிறாள். நாகபாம்பால்கூட அதற்குச் சரியான விடை கொடுக்க முடியவில்லை. ஆனால் ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் - நெருப்பில் காய்ச்சிய இரும்பைக் கையில் பிடித்துதான் உண்மையானவள் என்று நிரூபிப்பது தான் ஊர் வழக்கம் - நாகபாம்பைக் கையில் பிடித்து சத்தியம்செய்வேன் என்று அவள் கேட்க வேண்டும் என்றும் அப்போது தான் அவளைக் கடிக்காமல் விடும்போது அவள் உண்மையானவள் என்று ஊரவர்கள் நம்புவர் என்றும் அது உறுதி அளித்தது. அப்படியான விஷப் பரீட்சை நடத்தி அவள் இறந்துவிட்டால் என்று ஊரவர்கள் பயப்படுகிறார்கள். ஆனால் அதை அவள் நடத்தி வெற்றி பெறுகிறாள். அதைக் கண்ட ஊரவர்கள் அவளைத் தெய்வமாக்கி அவள் கணவனை அவளுக்குச் சேவகம் செய்ய வேண்டும் என்று பணிக்கிறார்கள். இதுவே அதன் உள்ளார்ந்த கதை. ஆனால் அதற்குள் பல கதைகள். கதைகளின் கதைகள்.

. நாகபாம்பை இந்துக்களில் சிலர் தம் கடவுளாகக் கூடக் கொண்டாடுகின்றனர். அது பிள்ளைகளில்லாத பெண்களுக்கு பிள்ளை "வரம்" கொடுக்கும் தெய்வம். கர்நாடக மாநிலத்தில் நாகமண்டல என்ற ஒரு சடங்கு. அது சூரியன் அஸ்தமனமாகி இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்குப் பிறகு ஆரம்பித்து இரவு முழுவதும் நடைபெறும். அன்று பகல் ஐந்து தலைநாகத்தின் படத்தை கோவில் முன்றலில் வரைந்திருப்பர். மண்டலம் அல்லது வட்டம் ஐந்நிற மாவினால் கீறப்பட்டிருக்கும். அந்தச் சடங்கில் வைத்தியரும் பத்திரி என்ற கலை ஆடுபவரும் முக்கிய இடம் வகிப்பர். வைத்தியரே பிரதான பாட்டுக்காரர். அவரே சடங்கை நடத்துபவர். அவரே பத்திரியையும் வழிநடத்துபவர். பத்திரியை நாகபாம்பு ஆட்கொண்டவுடன் பத்திரி பாம்பைப் போல ஆடத்தொடங்குவார். அப்படி ஆடத் தொடங்கியவுடன் மண்டலத்தைச் சுற்றியுள்ள விளக்குகள் எரிய ஆரம்பிக்கும். பாட்டுப் படிப்படியாக உயரஉயர பத்திரியும் பாம்பைப் போல புரண்டு புரண்டு ஆடவும் படம் எடுக்கவும் சீறவும் தொடங்குவார். பார்ப்போர் அனைவரும் பின்னகர, வைத்தியர் மட்டும் பத்திரியுடன் சேர்ந்து ஆடத் தொடங்குவார். அவர்கள் ஆட்டம் நாலைந்து மணி நேரம் நீளும். வைகறைப் போதில் பத்திரி தன் நடனத்தை முடிப்பார். கொந்தளிப்பு அகன்றுவிடும். பாட்டும் நின்றுவிடும். வைத்தியரும் தன்வழி நடத்தலை நிறுத்துவார். ஆனால் இப்போது பத்திரிக்கு அருளும் சக்தியும் கிடைத்துவிடும். அவரைச் சுற்றி மக்கள் கூடுவர். அவரும் நாகபாம்பின் அதிகாரத்துடன் பேசுவார். எதிர்காலத்தைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைப்பார். மலட்டுத்தன்மை நீங்கச் செய்வார். சரும நோய்கள் மாற்றுவார். தொழுநோயைக் கூடக் குணப்படுத்துவார்.

தென்னிந்தியாவில் பத்திரி ஆணாகவும் இந்தியாவின் வேறுசில பகுதிகளில் பெண்ணாகவும் இருக்கிறார். இந்நாடகத்தில் பத்திரியை ராணி என்ற பெண்ணாகவே படைத்திருக்கிறார் கர்னாட்.

ஏ.கே.ராமானுஜம் சொல்லிய இரு வாய்மொழிக் கதைகளை வைத்து இந்நாடகத்தை எழுதியதாகக் கூறும் கிரிஷ் கர்நாட் "இந்தக் கதைகளைக் கிழவிகள் பிள்ளைகளுக்கு உணவூட்டும் போது சொல்வார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் மற்றவர்களும் பெண்களே. ஆகவே, இக்கதைகள் பிள்ளைகளை நோக்கிச் சொல்லப்பட்டாலும் அதேவேளை குடும்பத்திலுள்ள மற்றப் பெண்களுக்கும் சொல்லப்பட்டவையே. குறிப்பாகப் பெண்கள் எப்படி இவ்வுலகத்தைப் புரிந்து கொள்கிறார்கள் என்பதையும் இக்கதைகள் வெளிப்படுத்துகின்றன. இவை தந்தைவழிக் குடும்ப ஆட்சித் தலைவனைக் கொண்ட அமைப்புக்களுக்கு எதிரான பண்டை நூல்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் நேர் எதிர்ப்புள்ளி விளக்கங்களைக் கொடுப்பனவாகவும் அமைந்துள்ளன. உதாரணமாக, நாகமண்டல என்ற இக்கதையில் வரும் ராணி என்ற இளம் பெண்ணின் நிலை. கூட்டுக் குடும்பத்தில் தன் கணவனை, தொடர்பில்லாத இரு தளத்தில் தான் சந்திக்கின்றாள். ஒன்று, பகலில் ஓர் அந்நியனாக. மற்றது, இரவில் காதலனாக. தொடர்பற்ற இந்த இருவகை உறவுகளின் மாதிரிகளும் ஒருவகை விகற்பமே. ராணி அடைக்கப்பட்டுள்ள வெறுமையான வீடு அவள் திருமணமான குடும்பத்தைக் குறிக்கின்றது. இதில் வந்துள்ள பல கதைகளும் கதைகளின் இயல்புகள் பற்றியே சொல்லப்படுபவை" என்றும் கூறுகிறார்.

கிரிஷ்கர்னாட்டின் "நாகமண்டல" என்ற இந்நாடகம் சலி யோன்ஸின் நெறியாள்கையில் யூலை 23 தொடக்கம் ஓகஸ்ட் 3 வரை பழைய நாடகக் கொட்டகையான ரொறன்ரோவில் உள்ள ரறகன் தியேட்டரில் ஆங்கிலத்தில் பேசி நடித்துக் காண்பிக்கப்பட்டது. இந்நாடகம் லூதர் ஹன்ஸ்றாஜ் தயாரிப்பு. இதில்

நடித்தவர்கள் முறையான நாடகப்பள்ளியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள். இதில் பாடியவர்கள் கர்நாடக சங்கீத வித்துவான்கள்.

நாகபாம்பு நடனத்தை நாம் பலமுறை பார்த்திருக்கிறோம். "நாதர் முடி மேலிருக்கும் நாகபாம்பே. நச்சுப் பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே" என்ற பாட்டை நாம் பலமுறை கேட்டுச் "சொக்கி" இருக்கிறோம். அந்தப் பாட்டும் நடனமும் நம் மனத்தில், கலையில் அழியாத இடத்தைப் பெற்றிருக்கின்றது. அந்த நடனத்திற்கும் பாட்டிற்கும் பின்னால், திராவிட வரலாறு, புராணம், ஐதீகம், தெய்வ நம்பிக்கை முதலியன இருக்கின்றன. ஆனால் கிரிஷ் கர்னாட்டோ அதை வைத்து இந்திய கூட்டுக் குடித்தனத்தால் பெண்கள் எப்படி அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை பாட்டி கதை சொல்லும் பாணியில் இங்கே பாட்டி இல்லாமல் யாரோ ஒருவன் கதை சொல்ல அதை நாடகமாக ஆக்கியுள்ளார்.

பல பரிமாணங்களைக் கொண்ட இந்நாடகத்தில் புராணங்கள், ஐதீகங்கள், பெண்ணைத் தெய்வமாக்கல் - சாதாரண எளிய பெண்ணை- அதற்காக ஊரார் காத்திருந்தது போன்ற நடத்தை, அற்புதங்கள், கற்பனைகள், அடக்குமுறைகள், ஆணாதிக்க மரபுகள், சுபமுடிவுகளை எதிர்பார்க்கும் மனித மனம், கதை கேட்போர் ஆவல், ஆகியவை பலவாறாக வெளிப்படுகின்றன.

உயர்மட்ட ரசனை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது இந்நாடகம். "நாதர் முடி மேலிருக்கும் நாகபாம்பே" என்ற அருமையான தமிழ்ப் பாடல், புல்லாங்குழல் இசை பலமுறை ஒலிக்க அதற்கு அபிநயம் பிடிக்கும் பாம்பாட்டம் ஆடும் ஆண், தேவதைப் பெண்களின் அலங்காரமான, ஒயிலான அசைவுகள், ஒளி விளக்குகளுடன் உல்லாசமாக, இன்பமான, கனவு நிலைச் சஞ்சரிப்புகள், காதலர்களின் இன்ப எழுச்சியைக் காட்டும் காட்சிகள் போன்றவை நாடகத்திற்குப் புதிய மெருகைக் கூடக் கொடுக்கின்றன. அதேபோல கவித்துவ நடையில் உணர்ச்சி நிறைந்த பல உரையாடல்கள், மேடை முழுவதையுமே நெறியாளர் பயன்படுத்திய முறை ஆகியவை நாடகம் பார்ப்பவர்கள் அந்நியமாகாமல் இணைந்த ஒன்றாகவும் இருக்க வைத்த சிறப்புகள். மூன்று சதுரக் கோடுகள் சமையலறை, படுக்கையறை முன்னறை ஆகியவற்றைக் குறிக்க, நீள் சதுர கல்லில் உள்ள விரிக்கை படுக்கையாக, பாம்புப் புற்று நாக பாம்பின் இருப்பிடமாக, வீட்டின் முன்னுள்ள கோலம் இந்திய நாடகம் அல்லது கலாச்சாரம் என்பதைக் குறிக்க ஒரு நாடகத்துக்குத் தேவையான பொருட்கள் பூர்த்தியாகி விடுகின்றன.

நாடகம் இந்தியக் கலாச்சாரத்தையும் சமூகத்தையும் அடிப்படையாகக் கொண்டது. நாடகத்தில் தமிழ்ப் பாட்டுக்கள், தமிழ்ச் சொற்கள் ஒலித்தன. அதனால் எங்களுக்கு நல்ல தமிழ் நாடகம் ஒன்றைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆனால் நாடகம் பார்த்தவர்களில் தமிழரைக் காணவில்லை. பிறமொழி நாடகங்களைப் பார்ப்பது தமிழ் நாடக வளர்ச்சிக்கும் அனுபவத்துக்கும் பயன் அளிக்கும் என்பதை அடுத்தவர் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

முகப்போவியம்
"தீயில் இருப்பு"
அ. மாற்கு

மூலம்: **Siegfried Sassoon** தமிழில்:- ஞானம் லம்பேட்

# பின் நினைவு



*இன்னும் நீ மறந்துவிட்டாயா?*
*செய்திகள் தணிக்கை செய்த நாளிலிருந்து*
*கடகடவென உருளும் உலக நடப்புகள்,*
*நகரச் சந்தியில் வாகனங்கள் கட்டுப்படுத்தப்படுவது போல்,*
*உள் எண்ணத்தில் கைவிட்ட பயங்கர இடை வெளிகள்*
*ஒளி பெற்ற மோட்சத்து முகில்கள் போல*
*நிரப்பப்பட்டன.*
*மரணத் தீர்ப்பு பிற்போடப்பட்ட மனிதன் நீ*
*உன் இனிமையான அமைதி நேரம்.*
*கடந்த காலமோ மாற்றமில்லை*
*பயங்கரப் போரோ உனக்கு விளையாட்டு.*

*இன்னும் மறந்து விட்டாயா.........?*
*திரும்பிப் பார்,*
*போரின் இழப்புகளை உற்றுப்பார்*
*உன்னால் ஒரு போதும் மறக்க முடியாதவை*

*மமெற்றைக் கைப்பற்றிய அந்த இருண்டமாதம்*
*உனக்கு நினைவிருக்கிறதா*
*குழி கிண்டி மண்சாக்கடுக்கி,*
*காவல் காத்த அந்த இரவு?*
*எலிகளும், முன்னரங்கில் நாற்றம் ஊறிய*
*அழுகிய பிரேதங்களும்*
*உனக்கு நினைவில் உண்டா?*
*விடியும் காலையும், ஊத்தை வெள்ளையும்,*
*குளிரும் நம்பிக்கை இழந்த மழையுடன்,*
*என்றாவது கேட்டாயா*
*இவை திரும்ப வருமா? என்று.*


*தாக்குதலுக்கு முன்னான அந்த நேரமும்,*
*உன்னை ஆட்கொண்ட கோபாவேஷமும்,*
*கண்மூடிய அனுதாபமும் அளித்த தீர்ப்பில்*
*உன் உற்று நோக்கலும்,*
*மனிதரின் வெளுறிய முகங்களும்*
*உனக்கு நினைவிருக்கிறதா?*
*சாகும் கண்களும், சரியும் தலையுடன்*
*ஸ்ரெச்சரில் கிடத்திய அரைப் பிணங்களை.*

*அன்பும் நேயமும் நிறைந்த இளம் முகங்களில்*
*நரைத்த பார்வை இருந்தது*
*உனக்கு நினைவிருக்கிறதா?*

*இன்னும் மறந்து விட்டாயா?*
*நீட்டி நிமிர்ந்த பசிய வசத்தில்*
*உரத்துச் சொல்*
*“ஒரு போதும் மறவேன்” என்று*



குமார் மூர்த்தி



**கை** கால் எல்லாம் வெடவெடக்க அடுக்கிக் கொண்டிருந்த சாமான்களையெல்லாம் அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்து ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டான் சபேசன். வாயெல்லாம் வறண்டு நாக்கு வந்து மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. முன்னுக்குள்ள கல்லா மேசையில் இருந்து நிரூபன் ஒருமுறை சபேசன் என்று குரல் கொடுத்தான். மறுகணம் ரெலிபோன் சிணுங்கியதும் அதை எடுத்து காதோடு அணைத்துக் கொண்டான். நிரூபனைக் கூப்பிடுவதற்கு முயற்சி செய்தான் சபேசன். ஆனால் அவன் குரல் அவனுக்கே திரும்பி வந்தது. கல்லாப் பெட்டியில் இருந்த

நிரூபன் ரெலிபோனில் ஆகா என்று அட்டகாசமாக சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தான். அதுவும் சபேசனுக்கு துல்லியமாக கேட்டுக் கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் சவத்துக்கு என்ன கும்மாளம் வேண்டிக்கிடக்கு நெடுகலும் இவன் இப்படித்தான் எல்லாவியாதிக்கும் மருந்து சொல்லிறவன் மாதிரி அலம்பிக் கொண்டிருப்பான். மனதுக்குள் திட்டிவிட்டு மறுபடியும் நிரூபனைப் பார்த்து குரல் கொடுத்தான். குரல் வெளிவரவும் நிலவறையில் இருந்து (Basement) கடகட என்று சத்தத்துடன் ஏதோ உருண்டு விழவும் சரியாக இருந்தது. அப்படியே ஒடுங்கிப் போனான். மூச்சுவிடக்கூட அவனுக்கு பயமாக இருந்தது.

இதென்ன கஸ்ரகாலம் சீலன் நல்ல அருமையான பொடியன். அதுவும் பிள்ளை குட்டிக்காறன். எப்போதும் சிரிச்ச முகம். கடவுளே சீலனுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது என்று மனதுக்குள் குளத்தடி வயிரவரை வேண்டிக் கொண்டான். இருந்தாலும் அவன் எண்ணங்களை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. தறிகெட்டுப் பாய்ந்தது. துவக்கால சுட்டிருந்தா சத்தங் கேட்டிருக்கும். ஒருவேளை கத்தியால குத்தியிருப்பானோ! இல்லை கழுத்தை நெரிச்சு.......... கண்களை ஒருகணம் மூடிக் கொண்டான். மறுபடியும் காதை கொடுத்து ஏதாவது சத்தம் வருகின்றதா என்று கவனித்தான். நிரூபனின் சத்தத்தை தவிர வேறெதுவும் கேட்கவில்லை.

மறுபடியும் கறுவலின் முகத்தை நினைவுக்கு கொண்டு வந்தான் சபேசன். வழமையாக வருகிற கறுவல்களில் இவன் இல்லை. அந்த முகத்தை எல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்தான். நிச்சயமாக இவன் புது ஆள்த்தான். விறுவிறு என்று எல்லாவற்றையும் கடந்து பேஸ்மன்ருக்கு போய்விட்டான். தற்செயலாகத் தான் திரும்பிப் பார்த்தான் சபேசன். அப்போது தான் படியில் வேகமாக இறங்கிக் கொண்டிருந்தான் கறுவல். கறுவலின் முகம் சரியாக தெரியவில்லைத்தான். இருந்தாலும் பார்த்த அளவில் அவன் ஒரு விறைச்ச கறுவலாத்தான் இருக்க வேணும் என்று மனம் முடிவுகட்டி விட்டது.

எப்போதுமே கறுவல்களைக் கண்டால் சபேசனுக்கு இனம் தெரியாத பயம் ஏற்பட்டு விடும். அவர்கள் கடைக்கு வந்தாலும் இவன் நெருங்க மாட்டான். அவங்கள் பொல்லாதவங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துபோட்டு போடுவாங்கள் என்பது அவனது அசைக்க முடியாத அபிப்பிராயம். நண்பர்களுடன் கதைக்கும்போதும் அப்படித்தான் கதைப்பான். இரண்டு வருடத்திற்கு முன்னால் ஏஜென்ற் கொண்டுவந்து கெனியாவில் இறக்கியபோது தான் முதன்முதலாக கறுவலையே சபேசன் பார்த்தான். கொஞ்சநாள்களுக்குள் ஒரு கறுவலின் புத்தகம் பொருந்தி வரவே கனடா வந்து சேர்ந்துவிட்டான். இங்கும் கறுவல்களுடன் பழகும் சந்தர்ப்பங்கள் இருந்தும் அவற்றை தவிர்த்து விடுவான். எப்போதும் அவர்கள் ஒரு தீண்டத்தகாதவர்கள் மாதிரித்தான் நடந்து கொள்வான். ஆனால் சீலன் அதற்கு நேர்மாறானவன். சபேசனிடம் அவனது அபிப்பிராயம் பிழையானது என்றும் அவர்களும் எங்களைப் போன்ற மனிதர்கள் தான் என்றும் வாதிடுவான். ஒரு வெள்ளைக்காரன் பார்வையில் நாங்களும் கறுவல்கள்தான். நாங்கள் கறுவல்களைப் பார்ப்பது போலத்தான் வெள்ளைக்காரன் எங்களைப் பார்க்கிறான். இந்த நாட்டில் நாங்களும் அவர்களும் ஒரு இனம், அதாவது சிறுபான்மையானவர்கள். எனவே நாங்கள் அவர்களுடன் வேற்றுமை பாராட்டாது நடந்து கொள்ள வேண்டும் என்பான்.

““உன்ர கதையைப் பார்த்தால் அவங்களோட விடாக் குடியாக் கிடந்து சம்பந்தம் வைக்க வேணும் எண்டா சொல்லுறாய்” என்று ஏதாவது இடக்காக சொல்லுவான் சபேசன். அப்படி முட்டாள்தனமாக சிந்திக்காதே நான் சொல்லுவது அதுவல்ல. இங்குள்ள பெரும்பான்மை வெள்ளையரால் அவர்கள் இனரீதியாக தாக்கப்படும் போதும் அல்லது புறக்கணிக்கப்படும் போதும் அவர்களுக்காக நாமும் குரல்

கொடுக்க வேண்டும். எங்களுக்கும் அந்த நிலை வரலாம். எனவே நாங்கள் பரஸ்பரம் கைகோர்த்துச் செயற்பட வேண்டும் என்பான் சீலன்.

ஐயோ! கறுவல் நல்லவங்கள் நல்லவங்கள் எண்டு வாய்க்கு வாய் சொன்னியே இப்ப பாத்தியா? என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டு நிரூபன் நின்ற இடத்தை நோக்கி பூனைபோல் மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்து போனான் சபேசன். அப்போதும் நிரூபன் ரெலிபோனில் கதைத்துக் கொண்டிருந்தான். கிட்டப் போனதும் படாரென ரெலிபோனைப் பறித்து வைத்தான் சபேசன். பின் நிரூபனை முறைத்துப் பார்த்துவிட்டு "உங்க என்ன நடந்தாலும் உனக்கொரு கண்டறியாத ரெலிபோன்" என்று பொரிந்து தள்ளினான். என்னடா! என்ன நடந்தது சொல்லு பதட்டப்பட்டான் நிரூபன்.

என்ன! நடந்ததோ! தொடர்ந்து பேசமுடியாமல் விக்கினான் சபேசன். அவனின் தோளைப் பிடித்து உலுக்கிய பின்தான் நிதானத்திற்கு வந்தான் சபேசன்.

"கறுவல் ஒருத்தன் பேஸ்மன்ருக்குள்ள போயிற்றான் சீலன் உள்ள நிண்டவன் இந்நேரம் எல்லாம் முடிஞ்சிருக்கும்" சொல்லி முடியவும் சபேசனுக்கு கண்களெல்லாம் கலங்கி விட்டது.

கறுவலோ! அப்படி ஒருத்தரும் உள்ள போகேல்லயே. நான் இதிலதான் பார்த்துக் கொண்டு நிக்கிறன். சொல்லிவிட்டு நிரூபன் சிந்தனையில் தலையைச் சொறிந்து கொண்டான்.

நீ எங்க கண்டாய்! உனக்கொரு ரெலிபோன் - ஒரு கறுவல் வந்து விறுவிறு எண்டு ஏதோ வைச்சது எடுக்கப் போனது மாதிரி கீழபோயிற்றான்.

"இங்கவிடு நான் போய்ப்பார்த்துக் கொண்டு வாறன்" "ஐயோ! போகாத" என்று கைகளைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். முதல் பொலீசுக்கு போன் பண்ணு. பிறகு வெளியால போய் நிற்பம்..

"அவங்கள் வந்து என்னவாலும் செய்யட்டும்"

நிரூபனுக்கு இப்போது உண்மையிலேயே பயம் பிடித்துக் கொண்டது. ஒருவேளை இவன் சொல்லுறது உண்மையாயிருக்கலாம். இந்த நாட்டில் இது அடிக்கடி நடக்கிற விஷயம், இது வழமையாக வாற கறுவல்களாய் இருக்காது நிச்சயம் புது ஆளாகாத்தான் இருக்க வேணும். காசுப்பட்டறைக்கு வராமல் ஏன் கீழ போனான். சே! இன்றைக்கு சீலன் வரமாட்டன் என்று நிண்டவன் நான் கூப்பிட்டதால்தான் வந்தவன். ஒரு கணம் தன்னையே நொந்து கொண்டான்.

ஏதும் வித்தியாசமான சத்தம் கேட்டதே!

ஒருக்கா சடபடென்டுசத்தங் கேட்டுது பிறகு ஒரு அனுங்கல் மாதிரியும் கேட்டது பிறகு ஒண்டும் கேக்கேல்ல!

நிரூபனுக்கு உடம்பெல்லாம் குப்பென்று வேர்வை பரவியது. கைகள் லேசாக நடுங்கியது. "பொலிசுக்கும் அம்புலன்ஸ் சுக்கும் போன் பண்ணுவம் என்ன?" வேகவேகமாக தலையாட்டினான் சபேசன்.

பக்கத்தில் இருந்த ரெலிபோனை ஓசைப்படாமல் மிகமெதுவாக ஒருகையால் எடுத்துக் கொண்டு மறுகையால் நம்பரை அழுத்த போகும்போது அவன் கை நடுக்கத்தை அவனால் தடுக்க முடியவில்லை. மிகப் பிரயத்தனப்பட்டு முதலாவது நம்பரை அழுத்தவும். கீழே இருந்து படியேறுகிற சத்தமும் கதைக்கின்ற சத்தமும் வரசரியாக இருந்தது. பார்வையை அங்கே ஓடவிட்டான். முன்னுக்கு சீலனும் பின்னுக்கு கறுவலுமாக உரத்த குரலில் கதைத்துக் கொண்டு வந்தனர்.

ஐயோ உந்தக் கறுவல் தான். கறுவல் தமிழ் கதைக்கிறான் என்றான் சபேசன். நாயே! அது சுந்தரலிங்கமண்ணயடா என்றுவிட்டு கையை எட்டி விசுக்கினான் நிரூபன். குனிந்து கொண்டதால் அடிவிழாமல் தப்பித்துக் கொண்டான் சபேசன்.

# அமரர் அ. ந. கந்தசாமியின் பன்முக இலக்கிய ஆளுமை

வ. ந. கிரிதரன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## கவிதை

*ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றிலும் அ.ந.க. விற்குத் தனியிடமுண்டு. யாழ் பல்கலைக்கழக மாணவி, செல்வி. ஜீவானாவின் அ.ந.க. பற்றிய ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.*

> *"ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே கவிதை மரபில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்த காலப்பகுதி 1940ம் ஆண்டுக்காலப் பகுதியாகும். 40இலிருந்து ஈழத்தில் முற்றிலும் நவீனத்துவமுடைய கவிதை மரபொன்று தோன்றி வளரத் தொடங்கியது. இக்கவிதை மரபைத் தொடங்கியவர்கள் ஈழத்தின் மணிக்கொடியெனப் பிரகாசித்த மறுமலர்ச்சிக் குழுவினர்களாவர். இந்த மறுமலர்ச்சிக் குழுவிலும் அ.ந.கந்தசாமியவர்கள், மகாகவியெனப் புனைபெயர் கொண்ட உருத்திரமூர்த்தி, இ.சரவணமுத்து என்பவர்களே கவிதைத் துறையில் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்துள்ளனர். இவர்களே ஈழத்திலே நவீனத்துவமுடைய கவிதை மரபையும் தொடக்கி வைத்தார்கள்."*

*இது முற்றிலும் உண்மையான கூற்று. இவரது கவிதைகளின் கருப்பொருட்களாக தீண்டாமை ஒழிப்பு, தோட்டத்தொழிலாளர் இழிநிலை, சமூக அநீதிகள், சமுதாயச் சீரமைப்பு, இயற்கை, காதல், தத்துவம் போன்றவை விளங்குகின்றன. இவற்றை தமிழமுது, தேன்மொழி, வசந்தம், பாரதி, தினகரன், ஈழகேசரி, மல்லிகை, நோக்கு, இளவேனில், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரித்தன. "வில்லூன்றி மயானம்" என்ற இவரது கவிதை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை என்பவரின் பிரேதத்தை நகரசபைக்குச் சொந்தமான வில்லூன்றி மயானத்தில் புதைப்பதற்காகத் தலைமை தாங்கிச் சென்ற ஆரியகுளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட நிகழ்வைக் கடுமையாகச் சாடுகின்றது.*

> *"நாட்டினர் அறிவீர். வில்லூன்றி தன்னில் நாம் கண்ட ஈழத்தீ வெறுந்தீ அன்று. கேட்டினிலே உளபிணத்தை உண்பதற்குக் கிளர்ந்தெழுந்த தீயன்று, நெடுநாளெங்கள் நாட்டினிலே கிளைபரப்பும் சாதி என்னும் நச்சுமர வீழ்ச்சியினைக் காண்பதற்காம் வாட்டமுற்ற மக்களுளம் கனன்று பொங்கும் வல்லதொரு புரட்சித் தீ வாழ்க அஃது."*

*அ.ந.க.வின் (இன்னுமொரு) முக்கிய கவிதையான "எதிர்காலச் சித்தன் பாடல்" நாடு, மதம், மொழி, இனம், ஏழை, பணக்காரன், சாதியென்று பிளவுண்டு கிடக்கும் நிகழ்கால போர்கள் சூழ்ந்த உலகிற்கு மாறான பேதங்கள் பிரிவினைகளற்ற, சமத்துவமிக்க, அன்பு ஒன்றே கோலோச்சும் எதிர்கால உலகமொன்றைச் சித்தரிக்கின்றது. எதிர்காலச்சித்தனிற்கும் நிகழ்கால மனிதனிற்குமிடையில் நிகழும் உரையாடலாக அமைந்துள்ள அருமையான கவிதை இது. விஞ்ஞான நாவல்கள்*

*கதைகளைப் போல், விஞ்ஞானக் கவிதையென்றும் இதனை ஒரு வகையில் குறிப்பிடலாம். மேற்படி கவிதை காலத்தைத் தாண்டிச் செல்வதைக் குறிப்பிடுகின்றது.*

*தானமெடுப்பதற்காகச் செல்லும் துறவி ஒருவனிற்குத் தானமளிப்பதற்காகச் செல்வர்கள் பலர் காத்திருக்கின்றார்கள். அவரோ குஷ்ட்டரோகியொருவன் தரும் உணவை வாங்கியுண்கின்றார். "துறவியும், குஷ்ட்ட ரோகியும்" என்ற இந்தக் கவிதை அ.ந.க.வின் இன்னுமொரு முக்கிய கவிதை. சாகித்திய விழாவொன்றில் வாசிக்கப்பட்ட அ.ந.க. வின் "கடவுள் என் சோரநாயகன்" கவிதையைப் பற்றிக் குறிப்பிடும்போது தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளையவர்கள் "ஒரு நூற்றாண்டிற்கொருமுறை தான் இத்தகைய கவிதை தோன்றும்" என்பார். "மாம்பொழிலாள் நடனம்", "சிந்தனையும் மின்னொளியும்" "இரவு", "கைதி", "தேயிலைத் தோட்டத்திலே" போன்ற இவரது ஏனைய கவிதைகளும் குறிப்பிடத்தக்கன. இவற்றில் "சிந்தனையும் மின்னொளியும்" என்ற கவிதையைத்தனக்குப் பிடித்ததொரு கவிதையாக அ.ந.க. குறிப்பிடுவார். அ.ந.க. வின் இந்த ஆரம்பகாலக் கவிதை மிகவும் அற்புதமானதொரு கவிதை. கணப்பொழுதில் தோன்றி மறையும் மின்னல் கூடக் கவிஞரிடத்தே சேதியொன்றைக் கூறி விடுகின்றது. அந்தச் சேதி தான் என்ன?*

*".......வாழும் சிறுகணத்தில்*
*தேடி ஒரு சேவை செகத்தினில்*
*செய்ததுவே;*
*சேவையதன் மூச்(சு); அச்சேவை*
*இழந்தவுடன்*
*ஆவிபிரிந்து அகல்வானில் கலந்ததுவே*
*என்னே இம்மின்னல(து)*
*எழிலே வென்றிருந்தேன்*
*மண்ணின் மக்களிற்கு*
*மின்னல் ஒரு சேதி சொல்லும்*
*வாழும் சிறு கணத்துள்*
*வையமெலாம் ஒளிதரவே*
*நாளும் முயற்சி செய்யும்*
*நல்ல செயல் அதுவாகும்"*

*இக்கவிதையைப் பற்றி "நான் ஏன் எழுதுகிறேன்" என்ற தேசாபிமானியில் வெளிவந்த கட்டுரையில் அ.ந.க. பின்வருமாறு கூறுவார்.*

> *"இம்மின்னல் எனக்குணர்த்தும் சேதி என்ன? சில நாட்களே வாழ்ந்தாலும் மக்களுக்கும் உலகிற்கும் பயனுள்ளவனாக வாழ் - இன்று நீ இருக்கின்றாய் நாளை இறந்து விடலாம் ஆகவே நன்றே செய்க. அதையும் இன்றே செய்க."*

*அ.ந.க. "கசையடிக் கவிராயர்", "கவீந்திரன்" என்ற பெயர்களிலும் கவிதைகள் பல எழுதியுள்ளார். இதுதவிர வாழ்ந்த காலத்தில் பல்வேறு கவிதா நிகழ்வுகளின் தலைமைப் பீடத்தை அலங்கரித்துள்ளதையும் அறிய முடிகின்றது. 1963இல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க இரண்டாவது மாநாட்டில் அ.ந. கந்தசாமி தலைமையில், முருகையன், விடிவெள்ளி, தம்பி, தில்லைச்சிவன், யாழ்ப்பாணன், மௌனகுரு, ராஜபாரதி, புரட்சிக்கமால், சிதம்பரநாதபாவலர், போன்ற கவிஞர்களின் பங்களிப்பில் கவிதா நிகழ்வு நடந்ததை அறியமுடிகின்றது. ("ஈழத்து இலக்கியம் பல்துறைநோக்கு" என்ற சோமகாந்தனின் நூலிலிருந்து)*

*(தொடரும்)*

# அந்த(சு)ரங்கம்

பொ. விவேகானந்தன்


*கிழித்து*
*பக்கம்மாறி*
*கவிழ்த்துப் போட்டாலும் கூட*
*ஒட்டிக் கொள்ளும்*
*வேதாளச் சடலங்களாய்*
*சில.*
*முயன்றும்*
*முறிந்து போகாத*
*முருங்கை மனதில்*

*வேதாளக் 'கனம்'*
*பற்றி*
*கிளைகளுக்குள்*
*முரண் பரவ,*
*வேர்களும் கூட*
*சூடாகி.*

*முருங்கைக்குள்*
*பிரளயம்*

*சரி,*
*விக்ரமாதித்தனுக்கு*
*எப்போது வியர்க்கும்?*





**D. B. S. ஜெயராஜ்**

### *"சாந்தி" வானொலி*

*கடந்த மூன்று மாதங்களாக ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் "ரேடியோ சாந்தி" என்ற பெயரில் வானொலிச் சேவை ஒன்று நடைபெற்று வருகிறது. "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது" என்பார்கள். இந்த சாந்தி வானொலியும் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் இரவு 9 மணி முதல் 10 மணி (9p.m. - 10p.m.) வரை ஒரு மணித்தியாலம் ஒலிபரப்பாகிறது. C.H.R.Y. 105.5 F.M. அலைவரிசையில் இதனைச் செவிமடுக்கலாம்.*

*அத்துடன் Cable F.M.I. மூலமாகவும் இதைக் கேட்கலாம். Rogers Cable 107.9 F.M., SHAW Cable 92.9 F.M. Classicom 101.5 ஆகியவற்றில் கூட இதைக் கேட்க முடியும். ஆனால் ஒரு "ஸ்பிளிட்டர்" மூலம் கேபிளை உங்கள் ஸ்டீரியோவுடன் இணைக்க வேண்டும்.*

*இந்த ரேடியோ சாந்தி வானொலியின் சிறப்பம்சம் என்னவென்றால் அது மும்மொழிகளிலும் நடைபெறுவதாகும். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மாறி மாறி நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்கப்படுகின்றன. இலங்கையில் கூட இவ்வாறான மும்மொழி நிகழ்ச்சி இடம்பெறுவதில்லை.*

*சாந்தி என்பதே சமாதானமாகும். இந்த வானொலிச் சேவையும் இலங்கையில் சமாதானம், ஜனநாயகம், நீதி ஆகிய கோட்பாடுகளை முன்வைத்து நடைபெறுகிறது. சமூகத்தின் அடிநிலை மற்றும், ஓரம் கட்டப்பட்ட மக்கள் ஆகியோர் குரலை*

*எதிரொலிக்கிறது. அத்துடன் சமுதாயப் பிரதான நீரோட்டத்தில் இடம் பெறாத கருத்துக்களுக்கு அரங்கமாக அமைகிறது.*

*மூன்று மொழிகளிலும் அறிவிப்புக்கள், சிங்கள தமிழ் மொழிகளில் மாறி மாறிப் பாடல்கள், முக்கிய செய்தி, நிகழ்வுகள் பற்றிய உரையாடல்கள், நேர்முகச் செவ்விகள், இன ஒற்றுமையை வலியுறுத்தும் அபிப்பிராயங்கள் என்று இந்த வானொலி தனக்கே உரித்தான பாணியில் களைகட்டுகிறது*

*சமூக உணர்வுடன்கூடிய சங்கீதத்தை முன்னெடுத்துச் செல்லும் சிங்களப் பாடகி நந்தா மாலினி இசைத்தட்டுகள், மற்றும் புலம் பெயர்ந்த தமிழர் உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்தும் ஜெர்மனிய"சங்கதிகள்" ஒலி ஓவிய இசை நாடாக்கள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட கீதங்கள் அடிக்கடி ஒலிப்பதுடன் நிறைந்த வரவேற்பையும் பெற்றுள்ளன.*

*இலங்கையில் பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் தமிழ், சிங்கள, பாடல்களை வைத்து ஒலிபரப்பப்பட்ட விவரணச் சித்திரம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அதே போல் இலங்கையில் நடைபெறும் அதிகாரப் பகிர்வு முயற்சிகள் தொடர்பாக ஆராய்ந்த கருத்தரங்கும் நன்றாக இருந்தது. தமிழ் ஈழச் சங்கப் பிரதிநிதி, சிங்கள அமைப்பின் பிரதிநிதி, ஒரு பத்திரிகையாளர் ஆகியோர் இதில் பங்குபற்றினர்.*

*லாப நோக்கின்றி நடைபெறும் இவ் வானொலியின் தயாரிப்பாளர்கள் மூவர் முந்நாள் பத்திரிகையாளர் காமினி திசாநாயக்க, முந்நாள் விரிவுரையாளர் சாம் ராஜேந்திரா, மனித உரிமைகள் சட்டத்தரணி ஹசக்க ரத்னமலல்ல ஆகியோரே இவர்கள். இம் மூவருடன் மாணவியான ஆன் பூர்ணிமாவும் சேர்ந்து நிகழ்ச்சிளை வழங்குகிறார்.*

*கறுப்பின மக்களின் நிகழ்ச்சி, ஸ்பானிய மொழி நிகழ்ச்சி ஆகியவற்றிற்கிடையே புதன் தோறும் "ரேடியோ சாந்தி" ஒலிபரப்பாகிறது.*

*இந்நிகழ்ச்சியில் சமூகமட்டத்திலான தகவல்களை ஒலிபரப்ப நீங்கள் அழைக்கவேண்டிய தொலைபேசி 416 703 8142. நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் உங்கள் கருத்தைத் தெரிவிக்க நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். 416-736 5656.*

### *பாரிஸ் 'முகம்"*

*பிரான்சு நாட்டுத் தலைநகர் பாரிசுக்குள் புலம் பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் சிலரின் அயராத உழைப்பின் காரணமாக உருவான தமிழ்த் திரைப்படமே முகம் ஆகும். ஈழமண்ணுடனான தொப்புள் கொடி உறவுகள் அறுந்த நிலையில் அந்நிய மண்ணில் வந்து விழுந்து "முகம்" கொடுத்த எம்மவர்கள் வாழ்க்கையை யதார்த்தமாக சித்தரிப்பதே திரைப்படமாகும்.*

*ரொரென்ரோவிலும், மொன்றியலிலும் இத்திரைப்படம் அண்மையில் காண்பிக்கப் பட்டது. இங்குள்ள வெகுஜன ஏடுகள் படம் பற்றி அதீத பாராட்டுக்களுடன் கூடிய விமர்சனங்களை நிறைத்திருந்தன. வங்காள, மலையாள கலைப் படங்களையெல்லாம் இந்த "முகம்" தூக்கிச்சாப்பிட்டு விட்டது போன்ற புகழாரம் ஏராளம். புலம் பெயர்ந்த தமிழரின் அன்றைய வாழ்வைப் பிரதிபலிப்பதாகக் குறிப்புரைகள் தாராளம். உண்மை என்ன?*

*நாலாந்தர தென்னிந்திய சினிமாக்களைப் பின்பற்றி எடுக்கப்பட்ட புலம் பெயர்ந்த*

*தமிழ் சினிமாக்கள், மற்றும் தமிழ்த் திரைப்பட பாடல்கள் நடனக் காட்சிகள் ஆகியவற்றைப் பிரதி பண்ணித் திரையோவியங்களைப் "பெருமை" யுடன் தயாரிக்கும் எம்மவர் மத்தியில் இந்த "முகம்" வித்தியாசமானது தான். ஒரு மலிந்த மசாலாப் படத்தைத் தயாரிக்க முற்படாமல் சமூகப் பிரச்னையுடன் கலைப்படத்தின் தன்மைகளுடன் "முகம்" படத்தைத் தயாரிக்க பாரிஸ் கலைஞர்கள் முன் வந்தமை பாராட்டப்பட வேண்டிய ஒன்று தான். இதில் சந்தேகமேயில்லை.*

*ஆனால் அதற்காகப் படத்தை ஒரேயடியாகத் தூக்கிவைத்து சத்தியஜித்ரே போன்றோர் படைப்புகளை மிஞ்சி விட்டதாக விஞ்சிய விமர்சனங்களை முன்வைப்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். அத்துடன் அப் பாரிஸ் படைப்பாளிகளையும் ஒரு செயற்கை மமதைக்குள் தள்ளுவதாகும்.*

. *குறிக்கோள் நன்றாக இருந்த போதிலும் தொழில் நுட்ப ரீதியாகப் பல குறைபாடுகள் காணப்பட்டன. பாத்திரங்களின் தன்மைகளை தீர்மானித்திருந்த விதம் கூட ஒன்றிரண்டைத் தவிர ஏனையவற்றில் திருப்தியாக இருக்கவில்லை. பாத்திரங்களின் நடிப்புகள் ஓரிரண்டு பேரைத் தவிர இயற்கையாக அமையவில்லை. கதை சொல்லப்பட்ட விதம் பல இடங்களில் குறிப்பாக, இறுதியில் தொய்ந்ததுடன் செயற்கையாக அமைந்துள்ளது. அத்துடன் பல தடவைகளில் அடுத்த திருப்பம் என்னவாக இருக்கும் என்பதை சுலபமாக அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. "சினிமா வெரயிட்டி" என்ற வகையறையுக்குள் இதனைச் சேர்க்கக்கூடியதாக இருந்தாலும் அதி அற்புதமான படைப்பு என்று துதி பாடுவது அபத்தம்.*

*ஆனாலும் "முகம்" படத்துடன் ஆண் பார்வையாளர்கள் ஒன்றிப் போவதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. புலம் பெயர்ந்தோர் "முகம்" என்று தெரிவிக்கப்பட்டாலும் கூட படத்தில் காண்பிக்கப்படுவது தமிழ் ஆண்கள் சிலரின் கூட்டு வாழ்க்கைதான். புலம் பெயர்ந்த தமிழர் குடும்ப வாழ்க்கையோ சமூக வாழ்க்கையோ அல்லது தமிழ்ப் பெண்கள் வாழ்க்கையோ காண்பிக்கப்படவில்லை.*

*தனியான ஆண்கள் சிலர் அல்லது பலர் ஒரு பொதுவானக இருப்பிடத்தில் பங்கு போட்டுக் கொண்டு சீவியம் நடத்துவது புலம் பெயர்ந்த வாழ்க்கைக்கு மாத்திரம் உரித்தானதல்ல. நமது தாயகத்தில் கூட நம்மவரில் எத்தனையோபேர் உயர்கல்விக்காகவும் வேலைவாய்ப்புக்காகவும் தென்னிலங்கை வந்தபோது அனுபவித்தது தான். "சமறி" வாழ்க்கை என்று பொதுவாகச் சொல்வார்கள்.*

*இத்தகைய வாழ்க்கையில் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தவர்கள் சேர்வது, பிரிவது, நட்புக் கொள்வது, பகைப்பது, குதூகலித்து மகிழ்ச்சியாக இருப்பது, சோகங்களைப் பகிர்ந்து கொள்வது போன்றவை இத்தகைய வாழ்க்கை முறையை அனுபவித்த அனைத்து ஆண்களுக்கும் பழக்கமான ஒன்று தான். எனவே இப்படியான வாழ்க்கையைத் திரையில் காணும் போது நாம் அனுபவித்த அல்லது அனுபவித்துக் கொண்டிருப்பவைகளைக் கண்டு அவற்றுடன் நம்மை அடையாளப்படுத்திக் கொண்டு ஐக்கியமாகி விடுகிறோம். அத்துடன் பிரிந்து வந்த அன்னையை, ஊரை, உற்றாரை, நினைவூட்டும் காட்சிகளைத் திரையில் காணும் போது உணர்ச்சி வசப்படுகிறோம்.*

*இப்படியான மனவுணர்வுகள் எம்மை ஆட்கொள்ளுகின்றமையால் "முகம்" படம் நம்மைக் கடுமையாகப் பாதிக்கின்றது. அதி சிறந்த படம் என்ற அபிப்பிராயமும் தோன்றுகிறது. ஆனால் இது முற்றிலும் சரியல்ல.*

*ஆனால் மீண்டும் இங்கு "முகம்" தொடர்பான படைப்பாளிகளைக், கலைஞர்களைப்*

*பாராட்டியே தீரவேண்டும். வழமையான திரைப்பட மசாலாவுக்குள் கையைப் பிசையாமல் வித்தியாசமான நன்முயற்சியில் ஈடுபட்டமை குறிப்பிட்டுப் பாராட்டவேண்டிய அம்சம். திரைப்படக் குறைகளை உணர்ந்து தம்மைச் செழுமைப் படுத்திக் கொண்டால் இவர்கள் இன்னும் எவ்வளவோ முன்னேற்றகரமான முயற்சிகளை வழங்கலாம்*

*இறுதியில் ஓர் ஆதங்கம். கனடாவில் தமிழ்த் திரைப்பட முயற்சிகளில் ஈடுபடுவோர் "முகம்" போன்ற படைப்புகளால் உந்தப்பட்டு நல்ல முயற்சிகளில் ஈடுபட முன்வருவார்களா?*

*அதாவது தரங்குறைந்த தென்னிந்திய சினிமாக்களின் அடியொற்றிப் அல்லது பிரதி பண்ணிப் படமெடுக்கும் முயற்சிகளைத் தவிர்க்கத் தயாரா?*

**பராக்கிரம நிரியெல்ல**

*"யசோராவய" என்ற பிரபலமான தொலைக்காட்சி நாடகம், சிறி மெதுர, அனோமா போன்ற திரைப்படங்களை நெறியாள்கை செய்த பிரபல சிங்களத் திரைப்பட இயக்குனர் பராக்கிரம நிரியெல்ல தற்போது கனடா வந்திருக்கிறார். எத்தனையோ சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ள இம்முன்னணிப் படைப்பாளி ஆழமானவர், அமைதியானவர், அடக்கமானவர்.*

*யப்பானிய பாரம்பரிய நாடகக் கூத்து வடிவிலான "கமுக்கி" "நொ" ஆகியவை பற்றி இவர் நெறியாள்கை செய்து உருவாக்கிய இரண்டு விவரணப் படங்களைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அண்மையில் அதன் பின்னர் தனிப்பட்ட முறையில் உரையாடும்போது ஒரு தகவலைத் தெரிவித்தார். மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. தான் அண்மையில் ஒரு திரைப்பட முயற்சிக்காக கிழக்கு மாகாணம் சென்றபோது அவதானித்த ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார்.*

*கிழக்கு மாகாணத்தில் உள்ள கானகங்கள் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற போர்வையில் புலிகள் நடமாடும் பகுதிகளைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற சாக்கில் இக்காட்டு மரங்கள் கணக்குவழக்கின்றி வெட்டி வீழ்த்தப்படுகின்றன.*

*பாதுகாப்புப் படையினர் காட்டிலாகா அதிகாரிகள், மரக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் மரவியாபாரிகள் என்ற நான்கு சாராரும் இக்கூட்டு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கேட்டுக் கேள்வியின்றி வெட்டி வீழ்த்தி, தென்னிலங்கைக்குள் கொண்டுவந்து விற்பனை செய்கிறார்கள். மரம் விற்கும் விலைக்கு இலாபமோ இலாபம். எல்லாமே பாதுகாப்புக்குத்தாண்டா.*

*வடக்கிலும் இது நடைபெறுகிறது. குடாநாட்டின் பாரம்பரிய விருட்சகமான பனைமரங்கள் மூன்றில் ஒரு பகுதி தறிக்கப்பட்டாகி விட்டது. இப்போது வன்னியில் "ஜயசிக்குறு" முன்னேற முன்னேற கருங்காலியும் முதிரையும் வெட்டித் தறிக்கப்பட்டுக் காசாகின்றன. ஷெல்லடிக்கும் குண்டு வீச்சுக்களும் மிஞ்சிய பகுதிகள் தீயிடப்படுகின்றன. வனவிலங்குகள் அருகி வருகின்றன.*

*இலங்கை சுதந்திரமடைந்தபோது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 16% காடுகள் தாம். இப்போது அது 3% ஆகிவிட்டது. இப்போர் முடியும்போது மிகவும் குறைந்துவிடும். முன்னர் உணவு உற்பத்தி, மகாவலி நீர்ப்பாசனம் என்ற பெயரில் காடுகள் அழிக்கப்பட்டன. மரவியாபாரிகள் பணபலம் பெற்றனர். இப்போது பாதுகாப்பு என்ற பெயரில் வடகிழக்கில் காடுகள் அழிக்கப்படுகின்றன.*

*இது மாபெரும் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும். மழைவீழ்ச்சியைப் பாதிக்கும். வரட்சியை அதிகரிக்கும். நமது பரம்பரைத் தாயகம் படிப்படியாக பாலைவனமாகிறது. எதிர்காலம் வரண்டு போகிறது.*

**ரீ.வி. சிலோன்**

*ஒளிபரப்பு அலைவரிசை 47 - 4 இல் சனிக்கிழமை மதியம் காண்பிக்கப்பட்டு வந்த "தென்னாசிய செய்திவாரம்" ஆங்கில நிகழ்ச்சி இலங்கை விவரங்களுக்கு அல்லது இங்குள்ள இலங்கையர் பற்றிய விடயங்களுககு போதிய இடந்தருவதில்லை என்பது எம்மில் பலருக்கு நீண்டகால மனக் குறையாகும்.*

*கடந்த செப்டம்பர் நடுப்பகுதியிலிருந்து நேர ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டு இலங்கையர்க்கென அரை மணி ஒதுக்கப்பட்டுள்ளது. வரவேற்க வேண்டிய விடயம். தென்னாசிய செய்திவார நிகழ்ச்சிக்கு வேறு நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. ரீ.வீ. சிலோன் என்ற பெயரில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் ஓரிரண்டைக் கண்ணுற்றபோது கிடைத்தது ஏமாற்றம் தான்.*

*கலையரங்கம், கலாபம் என்ற பெயர்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கும் இதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. பெயரில் தான் மாற்றம். அதே அலங்கோலத் திரையிசை நடனம் முதல் அபத்தமான கலந்துரையாடல்கள் வரைஇத்யாதி இத்யாதி.*

*மனைவி அடிக்கடி கொழுக்கட்டை செய்து தருவாளாம். அலுத்துப் போன கணவன் ஒரு சுவை மாற்றத்துக்காக மாமியார் வீடு சென்றானாம். மாமியாரோ மருமகன் வந்து விட்டாரேயென்று விசேடமாகக் கொழுக்கட்டை அவித்துக் கொடுத்தாராம். விரக்தியுற்ற மருமகன் "ஓகோ கொழுக்கட்டையாரே நீ இங்கேயும் வந்து விட்டாயா? என்று சலித்துக் கொண்டாராம். இது குட்டிக் கதை.*

*அதேபோல் வித்தியாசமாக இருக்கும் என்று ரீ.வீ. சிலோனை நாடினால் "ஓகோ கலாபம் ரீ.வீ. யே நீ இங்கேயும் வந்து விட்டாயா?" என்ற நிலைதான்.*

*போதாக்குறைக்கு இலங்கையருக்கு தனித் தொலைக்காட்சி என்பதால் முக்கிய தென்னாசிய நிகழ்ச்சியில் இலங்கை விடயங்களுக்கு வழங்கப்பட்டு வந்த கொஞ்ச நஞ்ச இடமும் பறிபோய்விட்டது. அது ஓர் உப-கண்ட நிகழ்ச்சியாக உருமாறுகிறது.*

*பிரதியீடாக ரீ.வி. சிலோன் சிறப்பாகப் பரிமளிக்கும் என்ற எதிர்பார்ப்போ ஏமாற்றம் காண்கிறது. ஒரே விதமான நிகழ்ச்சி வடிவங்கள் தான் தமிழர் பண்பாட்டின் பரிமாணங்கள் என்பது போன்ற நிலைமை.*

*ஒரு நாய் நடனமாடுமேயானால் அந்த நடனம் சிறப்பாக உள்ளதா என்பதையிட்டு யாரும் அக்கறை கொள்வதில்லை. மாறாக நாய் நடனமாடுகிறதே என்ற விடயத்தால் பிரமிப்படைந்து சொக்கிப் போய் விடுவார்கள்.*

*பெண்கள் முதல்முதலாக சட்டத்தரணிகளாகி சட்டவாதம் செய்ததையிட்டு ஒரு பிரசித்தி பெற்ற பிரித்தானிய நீதிபதி தெரிவித்த குறிப்பு இது.*

*அதேபோல் கனடிய தொலைக்காட்சி ஒளிபரப்பு அலைவரிசைகளில் தமிழ் இடம் பெறுகிறது என்ற விஷயமே எங்களைப் புல்லரிக்கச் செய்கிறது. நிகழ்ச்சியின் தரம், நேர்த்தி பற்றி அக்கறை காண்பிக்கப்படுவதில்லை.*

*குறைந்த வசதிகளைக் கொண்டு நிறைய நிறைவான தரமுயர்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அளிக்கலாம்.*

*சட்டியில் இருந்தால் அகப்பையில் நிச்சயம் வரும்.*

# வெறுமை

கலாதரன்



தேடிக்கொண்டிருந்தேன்,
தெருவிளக்கின்
ஒழுக்கில்

நின்று, நிதானித்து
தேடினர்,
வநத ஒதாருவர்.

காலை இழுத்தபடி
இன்னொருவர்
குனிந்து தேட,
ஒன்று பலவாகித்
தொடர்ந்தது தேடல்

புதிதாய் ஒருவர்,
'என்ன தொலைந்தது'

நிம்மதி என்றேன்

'காதலித்தாயா'

'கண் நிமிர்ந்தேன்'

குனிந்த தேடல்கள்
விலகி நடந்தன.

'தொடர்ந்து தேடவில்லையா'
விழிச் சிவப்பில்'
வினா பொசுங்க
நின்றவர் சொன்னார்

"எல்லோரும் அவரவர் இடத்தில்
தேடிக்கொண்டிருக்கிறார்கள்
கிடைத்தல் பற்றிய
உத்தரவாதமின்றி.
நீ தேடு"

தெரு வெறுமையானது.






சாஸ்வதம்
சக்கரவர்த்தி


அந்நியப்பட்டதென் தேசம்.
நிற்க!

சமாதானத்துக்கான பாடலிலும் பார்க்க,
யுத்த எதிர்ப்புக் கவிதை
மிகவும் நன்றென அறிக!

அகதி வாழ்வில்
அருவெருப்பொன்றும் அவ்வளவாயிருந்ததில்லை
வாயுள்சலங்கழித்த
சமாதானச் சிப்பாயின் மூத்திரப்போக்கியை
கடித்தெடுக்கா இயலாமையிலும் பார்க்க..........

என்தேசத்துக்காரனாகிய நான்
பிறதேசத்துக்காரனான பிற்பாடு
- அஃதே -
ஆணுறைப்பையுள் தேங்கிடுமிந்திரியம்
வீரியமிழந்து இறந்துபோக
ஒன்று மட்டும் சொல்லமுடிகிறது
இராவணனும் அவன்வில்லனும்
இறந்துவிட்ட பிற்பாடும்
எரியும் லங்காபுரியில்
எப்போதோ எவளோ
பாதிமுலை பிய்த்து எறிந்திருத்தல்கூடும்

எனைப்படுத்தியது போன்று இன்னும்
அப்புறப்படுத்த வேண்டியவைகளை
அடையாளங்காண்க,
என் முன்னாள் தேசமே!



**விநோதகன்**

தமிழ் திரையுலகின் புத்தி ஜீவிகளில் ஒருவராக மதிக்கப்பட்டவர் பாலச்சந்தர். நடுத்தரவர்க்கத்தினரின் அபிலாஷைகளை திரையில் பிரதிபலிப்பவர் எனப் பெயர் பெற்றவர். அவரது திரைப்படங்களுக்கு நடுத்தரவர்க்கத்தினரின் மத்தியில் பெரும் வரவேற்புள்ளது.

நாடக உலகத்திலிருந்து திரைக்கு வந்து, இப்பொழுது தொலைக்காட்சியிலும் வலம் வருகிறார். இவருக்கே உரித்தான பொது அம்சங்கள் பல. இந்தப் பொது அம்சங்களே இவரது படங்களில் விரவி உள்ளன.

பொது அம்சங்கள்

இவர் சமுதாய விதியை மீறமாட்டார்.

கணவன், மனைவி பந்தம் புனிதமானது எனக் கருதுபவர்.

ஆங்கிலப்படத்தழுவல்களாக இருக்கும்.

இவரது படங்கள் யாவும் மத்தியதர வர்க்கத்தினரை கவரும் வண்ணம் எடுக்கப்படுகின்றன.

யதார்த்தம் என்பது இவரறியாதது.

பாத்திரங்களின் உள் உணர்வை வெளிக்கொணராமல் மேலோட்டமான பார்வையே இருக்கும்

கற்பனைப் பாத்திரங்களையே உலாவவிடுபவர்.

அனைத்து படங்களும் நாடகத்தன்மை கொண்டவை.

இவரது, வெகுஜனங்களைப் புல்லரிக்கவைத்த சில திரைப்படங்களின் சுருக்கத்தைப் பார்ப்போம்.

**அபூர்வராகங்கள்:-** ஒரு பெண்ணிற்காக புரட்சியை, ஒதுக்கும் கமலஹாசன், ஒரு வளர்ந்த பிள்ளைக்கு தாயான பெண்மணியைக் காதலிக்கும் கமலஹாசன், பாலச்சந்தரின் அனுமதி கிடைக்காத படியால் திருமணம் செய்ய முடியாது போகிற கமலஹாசன்.

**சிந்து பைரவி:-** திருமணமான நாயகன் ஓர் பெண்ணைக் காதலிக்கிறார். அப்பெண் கருவுறுகிறாள். பிரிவு ஏற்படுகிறது. அப்பெண் நாயகன் நாயகியை இணைத்து வைத்துவிட்டு தான் பெற்ற பிள்ளையையும் இவர்களிடம் கொடுத்துவிட்டுச் செல்கிறாள். காதலுக்கு காரணம் கூறுகிறார் பாலச்சந்தர் - மனைவிக்கு இசைஞானம் இல்லை. எனவேதான் வித்துவான் இசை ஞானமுள்ளவளைக் காதலிக்கிறார்.

***புதுப்புது அர்த்தங்கள்:*** *மனைவியால் துன்பப்படும் கணவனும், கணவனால் துன்பப்படும் மனைவியும் சந்தித்துக் கொள்கிறார்கள். காதலிக்கிறார்கள். பின்னர் சமுதாய நீதியின்படி கணவன் மனைவியுடனும், மனைவி கணவனுடனும் இணைகின்றனர்.*

***அரங்கேற்றம்:*** *கெட்டழிந்த பெண்ணிற்கு திருமணம் ஏன்? பாலசந்தரால் பைத்தியமாக்கப்படுகிறாள்.*

***அச்சமில்லை., அச்சமில்லை:-*** *அரசியல்வாதி செய்யும் அநீதிகளுக்காக அவரின் மனைவியே அவரை கொலை செய்கிறாள். தனிமனித பயங்கரவாதத்தை ஏற்றுக் கொள்ளும் பாலச்சந்தரின் புதிய முகம்.*

*இவை சில உதாரணங்கள் மட்டுமே. ஆழ்ந்து கிண்டினால் சிகை அலங்காரக் கடையின் குப்பை வாளிக்குள் கைவைத்த கதையாகிவிடும். ஒவ்வொரு படத்திலும் பல பொதுமைகள் வெவ்வேறு கலவைகளில். விதிவிலக்காக சில படங்கள் உள்ளன என்பது உண்மையே. "தண்ணீர், தண்ணீர்" (இது கோமல் சுவாமிநாதனின் நாடகம் - கோமலே திரைக்கதையும் எழுதியுள்ளார்) நிழல் நிஜமாகிறது. வானமே எல்லை போன்றனவற்றை குறிப்பிடலாம்.*

*இவரது புத்திசாலித்தனமான நாணல், எனும் திரைப்படம் டெஸ்பரேட் அவர்ஸ் என்ற ஆங்கிலப்படத் தழுவல். அதேபோன்று Forty Carots இன் தமிழ்சிதைவு அபூர்வராகங்கள். தாமரை நெஞ்சத்தில் வரும் கடைசிக் காட்சி, சோபியா லோறன் நடித்த படம் ஒன்றில் வரும் காட்சியின் அப்பட்டத்திருட்டு.*

*அதேபோன்று "சொல்லத்தான் நினைக்கிறேன்" படத்தில் நிரோத் வாக்கும் காட்சி Summer of 42 என்ற படத்தழுவல் - Puppet on a chair படகாட்சி ஒன்று மூன்று முடிச்சில் (y. விஜயா) தூக்குப் போட்டுக் கொள்வதாக வருகிறது.*

*எனவே தழுவல்கள் என்பது பாலச்சந்தரிடம் அளவுக்கு அதிகமாகக் காணப்படுகிறது. அண்மையில் வெளிவந்த "கல்கி" எனும் படமும், அதனையொட்டிய காலங்களில் தொலைக்காட்சித் தொடராக தயாரிக்கப்பட்ட "காதல்பகடைகளும்" இவரது இந்த தழுவல்களில் இருந்து நழுவிச் சென்றனவா? இல்லையேல் இவரது பொது அம்சங்களையாவது மீறியதா?*

***கல்கி***

*ஒரு பெண் பல பெண்களுடன் உறவுகொண்ட தாரமாகக் கொண்ட நாயகனை திருத்த முற்படுகிறாள். அப்பெண் நவீனகாலத்துப் பெண். ஏன் பாரதியின் புதுமைப் பெண் எனவும் கூறலாம். கற்பு என்பது வெறும் பூச்சாண்டி என கருதுபவள். நாயகனுடன் உறவு கொள்கிறாள். உறவு முடிந்த பின் அழுகின்றாள். ஆனால் ஒரு சிறுபுதுமை. இறுதியில் இப்பெண்ணை காதலன் ஏற்றுக்கொள்கிறான்.*

*இராமன் கீறிய கோட்டை சீதைகள் தாண்டுவதுண்டு. ஆனால் பாலச்சந்தர் சமுதாயக்கோட்டை மீறமாட்டார்.*

***காதல்பகடைகள்***

*தமிழ் நாட்டில் பாலச்சந்தரின் மின் பிம்பங்கள் - ரகுவம்சம், கையளவுமனசு, காதல்பகடைகள் தற்பொழுது பிரேமி என தொடர்களை தயாரிக்கிறது.*

*இவ்மின்பிம்பங்களின் தயாரிப்பே காதல் பகடைகள். இராமாயணத்தை யார் மறந்திருந்தாலும், மேடையிலும், பாடசாலைகளிலும் வானொலியிலும், திரையிலும்*

*அடிக்கடி நினைவூட்டப்படுகின்றன.*

*அந்த இராமாயணத்தை உல்டா பண்ணியதே பகடைகள். அங்கு சீதை தீக்குளிக்கிறாள். இங்கும் அதே நிலை. தீக்குளிப்பதற்குப் பதிலாக காதலி, தனது காதலனுக்கு தனது கற்பு புனிதமானது என நிரூபிக்க தன்னை காதலிப்பவனைத் தேடிச் செல்கிறாள். அவனிடம் கேட்பதுவும் தன் கற்பு புனிதமானது என நிரூபிக்கும்படி. பாலச்சந்தர் மாறவில்லை என்பதைக் கல்கியும், காதல்பகடைகளும் நிரூபிக்கின்றன. பாலச்சந்தரது திரைப்படங்கள் மேடைநாடகங்களின் சலுலோயிட் பதிவுகள். அடுக்கு வசனத்திற்கு பதிலாக, நறுக்குத் தெறிக்கும் வசனங்கள். இப்பொழுது அவர் நாடக உலகத்திற்கே மீண்டுள்ளார்.*

*தொலைக்காட்சித் தொடர்கள் இயல்பிலேயே நாடகத் தன்மையானவை. எனவேதான் எந்த ஒரு குப்பையையும், தங்கமாக மாற்றும் ரசவாதியாக பாலச்சந்தர் பரிணமிக்கிறார்.*

*சங்கத் தமிழக்கு தெளிவுரை எழுதிய மு. கருணாநிதியின் மகள், கனிமொழி பேட்டி ஒன்றில் பின்வருமாறு கூறுகிறாா். "பழைய காவியங்களில் பெருமைப்படும்படி ஒன்றுமில்லை" என. அதே காவியங்களை சுற்றித்தான் பாலச்சந்தர் எனும் சுப்பரின் கொல்லை. அவர் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தைவிட, தான் செய்யும் தொழிலையே நேசிக்கிறார். (வியாபாரம்)*

*பாலச்சந்தர் கலை உலகின் பம்மாத்துக்காரர் என்று சொன்னால் மௌனப் பெரும்பான்மையினில் பலர் இரத்தக் கொதிப்புக்கு ஆட்படுவர். ஏன்வம்பு.*


**டாக்டர் புஸ்பராணி கரன் வன்னித்தம்பி**

**பல் வைத்தியர்**

**DR. PUSHPA**

**DENTIST**



**MAIN DANFORTH DENTAL CLINIC**

**TEL: (416) 693 9202, (416) 690 2438**

2558 DANFORTH AVE. SUITE 206 TORONTO ON. M4C 1L3

# கரிச்சானின்

கடலைக் கண்டு கொள்வதற்கு முன்னால்,
கடல் பற்றிய என் கற்பனைகளின் தளம்,
இக் குளம்,
இக் குளத்தின் கர்ப்பப்பையில்தான்,
என் ஊர் கர்ப்பம் தரித்தது,
இத் தேக்கத்தின் தோற்றம் - சில பத்து ஆண்டுகளுக்கு முன்புதான்,
வன்னிப் பெருநிலத்து, மழைநீர் வடிகால் ஊடாய் வழிந்தோடி,
கடல் தேடிக் கலந்து, உப்பாய் உருமாறிப் போன,
அவலத்தைப் பொறுக்காத,
சில பொறுப்பான நெஞ்சங்கள்,
கூடி முயன்ற ஆக்கமே, இந்த நீர்த் தேக்கம்.
ஈராறு கூடி இரணையாய் இணைந்து, குளமான வரலாறு இது.
கட்டின்றி காட்டாறாய் கரைபுரண்டோடிய ஆற்று நீர் இந்த அணையின் அணைப்புக்குள் அமைதியாய் அடங்கிப்போனது.
புதிதாய் பூப்பெய்திய பெண் போல,
கால்வாய்களுக்குள் நாணத்துடன் நடக்கப் பழகியது.

நீண்ட நெடும்பாம்பாய் ஊடுறுத்த, ஒற்றைத் தெருவுக்கு மட்டும் தன்னை விட்டுக் கொடுத்த அந்த அடர்வனத்தை, நீர்த்தேக்கக் கால்வாய்கள் மெல்ல மெல்ல மலர்வனமாக உருமாறியது.
இக்குளத்தின் சுகமான பிரசவமாக,
நம்ஊர் பிறந்து, வளர்ந்து, எழுந்தது.
மழைக்காலத்தில் மட்டுமே வேரை மனதார நனைத்த மரங்கள்,
கோடைகாலத்திலும் தம் வேர்களின் வியர்வையை கழுவிக் கொண்டன.
அந்தப் பிரதேசத்து பச்சையங்கள் எல்லாவற்றிலும்,
இக் குளத்தின் வீச்சு விசாலமாய் வீழ்ந்திருந்தது.
இத் தேக்கத்தின் எழுச்சிக்குப் பின்னால் தான்
அப்பிரதேசத்து மண் விலையே இல்லாமல்,
மக்களுக்கு விநியோகமானது.
வனம் என்று அஞ்சி விலகிய பாதங்கள் போக,
தஞ்சம் என்றிருந்த இதயங்களுக்கு,
தாய்மையாய்த் தன்னைத் தாரை வார்த்து.

கோடை என்பது சூரியமுனியின் கோப காலம்,
அதுதான் வாழும் உயிரினங்களின் சாபகாலம்.
நம்மூரில் மட்டும்,
அந்த சாபத்திற்கு விமோசனம் இருந்தது. இந்தக் குளம் உருவில்,

*வெப்பக் காற்றுகள்,*
*குளித்து தன்னை குளிர்வித்துக் கொள்வதும்*
*இங்குதான்.*
*இந்தக் குளம்,*
*எங்கள் மண்ணின் ஈரத்திற்கு மட்டும் காரணம் அல்ல,*
*என் மனதின் உரத்திற்கும் காரணமாயிருந்தது.*
*இளமையில் வயதோடு வளரும் கற்பனைகள்,*
*எல்லைகள் இல்லாதவை.*
*அவற்றில் சில வடிவம் பெற்றாலும்,*
*புதிதாய் சில கற்பனைகள், சிறகுகளை விரித்துக் கொண்டதும்,*
*இக் குளத்தின் அணையோரம்தான்,*
*பருவம், புரிய ஆரம்பித்த நாள் முதலே,*
*இக்குளத்தோடான ஈர்ப்பு எனக்கிருந்தது.*
*ஊருக்குள் நான் தொலைகின்ற போதெல்லாம்*
*இந்த அணையோரமாகத்தான் கண்டெடுக்கப்பட்டுவேன்.*
*நீண்டு பரந்த இக்குளத்தின் ஒரு புறம் அடர்ந்த வனமாகவும், மறுபுறும்,*
*நாம் நடமாடும் புலமாகவும் அமைந்திருந்தது,*
*நீர் அருந்தவென*
*வனத்திற்குள் இருந்து புறப்படும் விலங்குகள்,*
*சில வேளைகளில்,*
*ஒரு காட்சிச்சாலையே அங்கு ஏற்படுத்தும்.*
*விழிகளை அலக விரிக்கும் ஆச்சரியங்கள் சில*
*இந்த அணையோரம்தான் அறிமுகமானது.*
*மீசை அரும்பிய வயதுகளில்,*
*நீரின் தாகமும், நினைவின் தாகமும்*
*ஒன்றாய்த் தணிந்ததும் இங்குதான்.*
*வளைகரங்களால் ஆற்றுப் படுத்தப்பட முடியாத காயங்களை இந்த அலைக்கரம் கொண்டுதான்,*
*மாற்றுப் படுத்தியிருக்கின்றேன்.*
*தாயின் பாசம்,*
*தந்தையின் போதனை,*
*காதலியின் நேசம்*
*நண்பனின் பரிவு,*
*இவை,*
*என் ஒற்றை நெஞ்சை வருடிக் கொடுத்த இக் குளத்தின் வடிவங்கள்.*
*நாளைகளில், ஏதேனும் ஒரு பொழுதில்,*
*அக்கரையோரமாய்,*
*என்னை நான் 'இறக்க' வேண்டும்*
*என் புழுதிபடிந்த அந்த பழைய முகத்தை*
*அங்கு நான் கண்டெடுக்க வேண்டும்,*
*என்னைப் போலவே,*
*என் ஊரின் முகம் அங்குதான் இருக்கிறது.*
*வாழும் இறைவனாய் இரட்சிக்கும் இக்குளத்தோடு,*
*எனக்கு சிறு வருத்தமும் இருக்கிறது.*
*ஊரில் நீந்தத் தெரியாத சிலருக்கு இக்குளம் மரணதண்டனை வழங்கியிருக்கிறது.*

# இத்திசைக்கு அந்நெறி

ஜோ. அமல்ராஜ்

*ஆங்கிலேயரின் ஆட்டம் என்று புகழ் பெற்ற கிரிக்கெட் இன்று கீழைத்தேய நாடுகளில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளமை சரித்திரத்தில் பழைய கதை. ஆனால் அதிசயமான விடயம் என்னவென்றால் இந்த ஆட்டத்திற்கான உலகக் கிண்ணத்தை ஆங்கிலேய அணியானது அண்மைக் காலங்களில் மூன்றாம் உலக நாடுகளிடம் கோட்டை விட்டமையே - முக்கியமாக சுண்டைக்காய் நாடான இலங்கையிடம். இதனையொத்த திருப்பம் கர்நாடக இசையிலும் இன்று ஏற்பட்டுக் கொண்டு வருவதை நாம் நன்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.*

*மேற்படித் திருப்பத்திற்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: நம் இசையின் 1. ஆழம் + வளம் 2. தெளிவான, விரிவான வரைவிலக்கணங்கள் 3. கற்பனைத்திறனுக்கு நம் இசையில் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம். உண்மையிலேயே மேலை நாட்டவரை மலைக்க வைத்துள்ள விடயம் என்னவென்றால் அவர்களுக்கே உரித்தான சில வாத்தியக் கருவிகளின் நுட்பமான ஒலி விளைவுகளை அவர்களே வியக்கும் வண்ணம் செயல்முறையில் நம்மவர் வெளிக்கொண்டுள்ளமையைக் குறிப்பிடலாம். இதற்கெடுத்துக்காட்டு Violin - குன்னக்குடி வைத்தியநாதன், Saxaphone - கத்ரி கோபாலநாத், & Mandolin - ஸ்ரீநிவாஸ்.*

***ஆழம், வளம்:*** *ஆங்கில இசையில் அடிப்படையாகக் கையாளப்படும் இராகங்கள் ஐந்தே ஐந்து மாத்திரமே. அவையாவன சங்கராபரணம் 29வது மேளம் (Major Scale), கீரவாணி 21வது மேளம் (Harmonic Minor), கௌரிமனோகரி 23வது மேளம் (Melodic Minor), நடைபைரவி 20வது மேளம் (Chromatic Minor), மோகனம் 28வது மேளப்பிறப்பு (Cycle of Fifths). இவற்றை வித்தியாசமான சுருதிகளில் வாசிக்கும் பொழுது அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பெயர் இடுகின்றார்கள். அதன் விளைவாக எழுந்த பெயர்களே C Major, G Major, C Minor, E .Minor என்பன. இருப்பினும் இருசாராரும் இவற்றைக் கையாளும் முறைகளில் பாரிய வேறுபாடுகளை அவதானிக்கலாம். நாம் இவற்றை அசைவுடன் கையாளுகின்றோம். ஆனால் அவர்களோ மொட்டையாகவே கையாளுகிறார்கள். இதற்கான காரணம் என்னவென்றால் அவர்களின் கணிப்புப்படி எந்த இரு ஸ்வரங்களுக்கிடையிலான ஒலியிடைவெளி (Tone difference) எப்பொழுதுமே அரை இடமாகும் (Semitone). அவர்களைப் பொறுத்தமட்டில் இதற்கு மாறான எந்தக் கூற்றுமே நடைமுறைச் சாத்தியமற்றதாகக் கருதப்படுகிறது. ஆனால் நம் இசையோ அவர்களது வரையறையையும் தனக்குள் சீரணித்துக் கொள்ளும் அதேவேளை மேலும் வேறுபட்ட ஒலியிடை வெளிகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் தன் எல்லையை விரிவுபடுத்தி உயர்ந்து கன்னித்தன்மையுடன் விளங்குகின்றது. எடுத்துக்காட்டு: பூபாளத்தில் தொனிக்கும் ரி யும் கௌளையில் தொனிக்கும் ரி யும் சுத்த ரிஷபமே. ஆனால் முன்னையதிலும் பின்னையதில் ரி சற்றுக் குறைந்தே தொனிக்கிறது. இல்லாவிடில் அது வேறு இராகமாகி விடும் அல்லவா!. இவ்வகையான நுட்ப சுருதிகளின் அடிப்படையிலேயே 72 தாய் இராகங்களும் அவற்றினின்று பல்லாயிரக்கணக்கான சேய் இராகங்களும் பிறக்கின்றன.*

இதற்குத் தூண்டுகோலாக இருந்தது ஆழமான கணித அறிவு என்பதை மேலை நாட்டார் தற்போது ஏற்றுக் கொள்கிறார்கள். முக்கியமாக வரிசை மாற்றம், சேர்மானம் பற்றியது. அதனை உறுதிப்படுத்துவதாக அமைகிறது தென்னிந்தியாவைச் சேர்ந்த பாஸ்கராவின் கண்டுபிடிப்பான முடிவிலி (Infinity) கோட்பாடு. இவையெல்லாவற்றிலுமிருந்து தெளிவாகும் உண்மையென்னவென்றால் மேலைநாட்டு இசையையும் விட நம் இசை மிகவுயர்ந்த வளமும் தொன்மையும் வாய்ந்ததென்பதாகும். அதன் விளைவுதான் இன்று மேல்நாட்டவர் நம் இசையில் கொண்டிருக்கும் தணியாத பற்றும் அதனைக் கசடறக் கற்க வேண்டுமென ஆங்காங்கே அவர்கள் நிறுவி வரும் கலைக்கூடங்களும் ஆராய்ச்சிக் கூடங்களும்.

**தெளிவான, விரிவான வரைவிலக்கணங்கள்:** கணிதத்தில் புலமை பெற்றவர்கள் வரைவிலக்கணங்களை மிகத் துல்லியமாக எடுத்தியம்புவதில் பெரும்பாலும் திறமைபடைத்தவர்கள். ஆகவேதான் நம் முன்னோர்கள் இராக தாள வரைவிலக் கணங்களை ஐயத்திற்கிடமின்றி தெளிவுபடுத்திச் சென்றுள்ளனர். இந்தக் கட்டத்தில், அடுத்த முக்கியமான அம்சம் பற்றி விளக்கத்தினைக் காண்போம்

அவர்களிடமும் தாளத்திற்கமைந்த, அமையாத இருவகை இசைவடிவங்களைக் காணலாம். இருப்பினும் பாரதூரமான வித்தியாசங்களை இங்கும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அவர்களின் கணிப்பின்படி எந்த ஒரு ஸ்வரமும் தனியாக எழுதப்படும்பொழுது அது எடுக்கக்கூடிய அதிஉயர் எண்ணிக்கை நான்கு மாத்திரமே. இந்த நான்கை, 2, 4, அல்லது 8 ஆல் பிரித்து ஒரு ஆவர்த்தனத்தில் (Bar) எத்தனை ஸ்வரங்கள் வரலாம் என்பதை பின்வருமாறு குறியிட்டுக் காட்டுகிறார்கள்.

2/2 = 2 இரு அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்,
2/4 = 2 ஒரு அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்,
3/4 = 3 ஒரு அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்
6/4 = 6 ஒரு அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்,
5/8 = 5 அரை அட்சரஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்,
6/8 = 6 அரை அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்,
7/8 = 7 அரை அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்,
9/8 = 9 அரை அட்சர ஸ்வரங்கள் அல்லது அதற்குச் சமமான ஸ்வரக் கோர்வைகள்.

**கற்பனை வளத்தின் முக்கியத்துவம்:** நம் இசையில் அதிஉயர்ந்த இடத்தை வகிப்பவை இராகம், தாளம், பல்லவி, நிரவல், கற்பனா ஸ்வரம் என்பனவாம். கீர்த்தனங்கள், தில்லானாக்கள், வர்ணங்கள் போன்றவற்றை எவ்வளவு சிரமங்கள் மத்தியிலும் கற்றுவிடலாம். ஆனாலும் மேற்குறிப்பிட்டவற்றை வெகுஇலகுவில் கற்றுவிடவே முடியாது. ஏனெனில் இவை அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது ஒருவரின் கற்பனைத் திறனே. நல்ல குரல் வளமுள்ளவராக இருக்கும் ஒருவர் ஒன்றில் கற்பனை வளம் குறைந்தவராகவோ அன்றில் அறவே இல்லாதவராகவோ இருக்கலாம். ஆனால் இரண்டும் ஒருங்கே சேர்ந்து விட்டால் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் இருக்கும் என்பர் சான்றோர். இதனால் தான் நம் இசையை தெய்வீக இசை என்று சொல்வர்.

வளமும் ஆழமும் நிறைந்த இந்த சிறப்பம்சம் மேலைத்தேய இசையில் மருந்துக்குத்தானும் கிடையாது. ஸ்வரக்குறிப்புக்கள் (Score sheets) இல்லாமல் எடுத்த எடுப்பிலேயே அவர்கள் பாடவோ அல்லது வாசிக்கவோ மாட்டார்கள

*அத்தோடு ஒரு குறிப்பிட்ட சுருதியில் அமைந்த பாடலை பாடுபவரின் அல்லது வாசிப்பவரின் சுருதிக்கேற்ப உடனடியாக மாற்றி வாசிக்கும் ஒழுங்கு முறையும் அவர்களிடம் பரவலாகவில்லை. ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக (Transposing) அதனை இப்பொழுதெல்லாம் இலகுவாக செய்கிறார்கள்.*

*கடந்த இருபது அல்லது முப்பது ஆண்டு காலமாக Jazz என்ற இசைவடிவம் உலகின் பல்திசைகளிலும் பிரபல்யமாகி வருகின்றதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இந்த வடிவத்தின் தந்தை Trumpet மேதையான Louis Armstrong என்னும் அமெரிக்க கறுப்பு இனத்தவரொருவர். ஆனால் கூர்ந்து கேட்டால் இந்த இசைவடிவத்தின் மூலாதாரம் நம் இசையே என்பது தெளிவாகும். சுருங்கக்கூறின் Jazz என்பது கறுப்பர்கள் நமது பல்லவி பாடும் முறையைப் படியெடுக்கப் போய் அதிலிருந்து திரிந்த அசலும் நகலும் இல்லாத ஒரு இசைவடிவம் - A musical hybrid. இவற்றிற்கிடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நோக்குவதன் மூலம் இதனைப் புரிந்துகொள்ளலாம*

**ஒற்றுமைகள்**

*பாடல் இரண்டு அல்லது மூன்று வரிகளில் அமைந்திருக்கும்.*
*தாளம் பலதரப்பட்ட சிக்கலான ஜதிக்கோர்வைகளைக் கொண்டிருக்கும்.*
*கற்பனைத்திறனுக்கு முதலிடம்.*
*தனி ஆவர்த்தனமும் முக்கியமான பங்கை வகிக்கிறது.*

**வேற்றுமைகள்**

*பாடல்களில் இராக பாவம் இராது.*
*நூதனமான ஜதிக்கோர்வைகளோ, கதி வேறுபாடுகளோ,*
*அல்லது களை வேறுபாடுகளோ இரா.*
*கற்பனை ஸ்வரங்களை மருந்துக்குத்தானும் கேட்க முடியாது.*
*தனி ஆவர்த்தனத்தில் நம்மவர் காட்டும் அற்புதமான நெளிவு சுளிவுகளை இங்கு எதிர்பார்க்க முடியாது.*

*கூட்டு மொத்தமாகப் பார்த்தால் நிகழ்ச்சியின் பெரும்பகுதி வெறும் ஒலிகளால் கட்டப்பட்ட பூச்சுமானங்களாக இருக்குமே ஒழிய அங்கு ஆன்மாவையும் உணர்வுகளையும் இதமாக வருடும் ஒரு உன்னத கலைப்படைப்பைக் காணவோ எதிர்பார்க்கவோ முடியாது.*

*அப்படியானால் இவ்வளவு நுணுக்கங்கள் உள்ள நம் இசையை நம்மவர் கேட்க மறுப்பதேன் என்ற வினா எழுகின்றது. உண்மை இதுதான். அ.) பெரும்பாலான கலைஞர்கள் பழைய பல்லவியையே மீண்டும் மீண்டும் பாடுகிறார்கள். ஆ.) பலதும் பத்தும் அறிந்தவர்கள் என தமக்குத் தாமே முத்திரை குத்திக் கொண்டுள்ள சில கலைஞர்கள் தாங்களும் உருப்படியாக ஒன்றும் செய்யாது மற்றவர்களையும் ஒன்றும் செய்யவிடாது இரண்டுங் கெட்டான் போக்கில் வாழ்ந்து வருகிறார்கள். இ.) பானையில் இருந்தால்தானே அகப்பையிலும் வரும் என்ற அடிப்படைத்தத்துவத்தை பெரும்பாலான கலைஞர்கள் ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். ஈ.) எந்தவொரு கலைஞனுக்கும் சமூக ஆன்மீகப் பொறுப்பு உண்டென்பதை உணர மறுக்கிறார்கள். இந்தக் கடைசி உண்மையை உணர்ந்து செயல்பட்டுத் தத்தமது ஆக்கங்களில் தமிழிசையையும் புகுத்தி வந்தால் அவை நிச்சயமாக பாமர மக்களால் போற்றிப் பேணப்படும் அழியாக்காவியங்களாகும்.*





**யோகி**

**ஒரு உச்சி வெயில் நேரத்தில், அந்த மனிதனின் உயிரற்ற உடலை, கைவண்டியில் கிடத்தி அவசர அவசரமாய் இழுத்து வந்தார்கள் இரு போராளிகள். குண்டுகளால் சல்லடையாகியிருந்தது உடல். வலது கை அரிசிப் பையை நெஞ்சோடு அணைத்து இறுகப்பற்றியிருந்தது.**

*இரவு முழுதும் இராணுவ முகாமிலிருந்து ஊர்மனையை நோக்கித் தொடர்ந்து ஷெல் குண்டுத்தாக்குதல். இந்தப் பயங்கரத்திற்குப் பயந்துதான் சூரியனே இன்னும் உதிக்கவில்லைப் போலும் என்று நினைத்தான் சுந்தரலிங்கம். தலைக்கு மேலாக விண்கூவிக்கொண்டு செல்லும் ஷெல் குண்டுகள் யார் வீட்டுக் கூரையில் விழுகின்றதோ, எத்தனை உயிர்களைப் பலிகொண்டதோ, கடவுளே! எத்தனை நாட்கள், எத்தனை இரவுகள்தான் பதுங்கு குழிக்குள் குடும்பத்தோடு நிலத்துக்கடியில்*

பதுங்கிக் கிடப்பது? உணர்வுகளும் மரத்துவிட்டன. சீவித்தால் ஒன்றாய்ச் சீவிப்போம் இல்லாவிட்டால், கூரையில் குண்டு விழுந்தால் குடும்பம் முழுதும் ஒன்றாகப் போய்ச் சேருவோம், என்ற மனநிலை வந்துவிட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவுபோட்டு எத்தனை நாட்கள் இருக்கும் என்று மனம் எண்ணிப்பார்த்தது. முப்பது நாட்களுக்கும் மேலாயிற்று. இராணுவ நடவடிக்கைக்குப் பயந்து பாதுகாப்புக்காகக் கோயில்கள் பள்ளிக்கூடங்களில் தஞ்சமடைந்தால் அங்கே பட்டினியும், தொற்றுநோயும் தொடங்கிவிட்டன. என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று சொந்தவளவுக்குள் திரும்பி வந்தாயிற்று. சிங்களப்படையின் அட்டூழியம் முடிய இப்போ அமைதிப்படை வந்தபின்னும் எங்கள் பிரதேசத்தில் மயான அமைதிதான். மீண்டும் போர் மீண்டும் ஊரடங்குச் சட்டம். ஒரு பீடி புகைத்தே மாதக்கணக்காயிற்றே என்று மனம் ஏங்கினாலும் சட்டென்று அந்த நினைப்பை உதறித்தளிள்னான்.

செய்கின்ற தினக்கூலி வேலையே இப்போ மாதக்கணக்காக இல்லை. கடனோ உடனோ பட்டு ஒருநாள் சாப்பாட்டுக்கு வழிபண்ணினாலும் கடைகளில் சாமான்கள் இல்லை. இருந்தாலும் எல்லாம் ஆனைவிலை, குதிரைவிலை. ஊரடங்குச் சட்டத்திற்குப் பயந்து, ஒருசில ஒழுங்கைக் கடைகள் மட்டும் அரை மணித்தியாலம், ஒரு மணித்தியாலம் பின் கதவைத் திறந்து களவாக வியாபாரம் செய்கிறார்கள். போர்ப் பிரதேசத்திலே மலிவான பொருள் மனித உயிர்தான்.

பட்டினிக் களைப்பிலும், குண்டுச் சத்தப் பயத்திலும் சுருண்டு படுத்துக் கிடக்கும் மூன்று பிள்ளைகளையும் ஆதரவோடு பார்த்து ஏங்கியது அந்தத் தந்தை உள்ளம். மனைவி சரசுவைக் கண்கள் தேடியபோது, தன்னைப் போலவே கேள்விக் குறியாய் அவளும் அடுத்த மூலையில் நினைவுகளை அசைபோட்டபடி உட்கார்ந்திருந்தது தெரிந்தது. இன்றைக்காவது ஒருவேளைச் சாப்பாட்டிற்கு ஏதும் வழிசெய்தேயாக வேண்டும் என்ற வைராக்கியம் மனதில் பிறந்தது. ஊருக்குள் ஒரு கடையிலும் அரிசி, பருப்பு கிடையாது என்று போனகிழமையே கைவிரித்து விட்டார்கள். பயந்து, பயந்து ஒழுங்கைகள், தோட்டங்கள் வழியே போகக்கூடிய இடங்கள் வரை போய் முயற்சி செய்தாயிற்று.

இன்னும் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நன்றாய் விடியுமுன் சைக்கிளில், ஒழுங்கைகளுக்கூடாகப் போய் காங்கேசன்துறை பிராதான வீதிவளையும் இடத்தில், இராணுவம் காணமுன் குறுக்காய் வீதியைக் கடந்து அந்தப் பக்கம் இணுவில் பகுதிக்குள் போய்விட்டால் கட்டாயம் அரிசிவாங்கலாம். அயலில் கதைத்தவர்கள். அந்த இடத்தில் இராணுவ நடமாட்டம் இல்லையாம். நாலைந்துபேர் துணிந்து வீதியைக் கடந்து அரிசி, சாமான் கொண்டு வந்து சேர்த்துப் போட்டார்கள். விடியமுன் வீதியைக் கடந்துவிட்டால் அந்தப் பக்கம் ஒழுங்கைகள்தானே! கெதியாக ஒரு கொத்து அரிசியும், முடிந்தால் பருப்பும் வாங்கிக் கொண்டு திரும்பிவிடலாம். இதைவிட்டால் வேறுவழி இல்லை.

சுந்தரலிங்கம் தீர்க்கமான முடிவோடு எழுந்தான். சாமி மடத்திலும் சட்டைப் பையிலும் கிடக்கும் பணத்தையெல்லாம் சேர்த்து எண்ணினான். இன்றைய செலவுக்குப் போதும் என்பதில் மனதுக்குத் திருப்தி. பிறகு ஒரு முடிவுக்கு வந்தான்.

"சரசு, அந்தப் பையை எடுத்துத்தா. இன்றைக்கு உயிர் போனாலும் இந்தக் குஞ்சுகளுக்குக் கஞ்சிவைக்க ஒரு கொத்து அரிசியாவது வாங்கிக் கொண்டுதான் திரும்பி வருவேன்"

"கொஞ்சம் வெறும் தேத்தண்ணீர் போட்டுத் தாறன். சீனிதான் இல்லை. குடிச்சிட்டுப் போங்கோ"

அவசரமாய் நிலைப்படியில் குனிந்து குசினிக்குள் ஓடிய மனைவியை மறித்தான்

"வேண்டாம் சரசு. அதெல்லாம் வந்து பார்ப்போம்."

"கவனமாய் பார்த்துப் போங்கோ. கனதூரம் போகாமல், கெதியாய் வாங்கோ".

சட்டையை மாட்டிக் கொண்டு, மாமரத்தில் சாத்தியிருந்த சைக்கிளை நிமிர்த்தியபோது அதன் சக்கரங்கள் தேய்ந்து, நைந்து போயிருப்பது தெரிந்தது. இயலாமையால் முகவாய் ரோமங்களைத் தடவிக் கொண்டான். இந்தப் பிரதேசத்தில் இப்போ மக்களின் நிலைமையும் இதுதானே. சைக்கிளை உருட்டி ஏறியிருந்து மிதித்த போது மனதில் ஓர் ஓர்மம் பிறந்தது. ஒழுங்கைகளுக்கு ஊடாக வளைந்து வளைந்து வீடுகளைக் கடந்துவிட்டால் கண்ணுக்குத் தெரியும் தூரம் வரை தோட்டங்கள் கொண்ட கோண்டாவில் கிராமம். சிலவருஷங்களுக்கு முன்னால்வரை, பச்சைப்பசேலென்று புகையிலைச் செடிகள் வருடம் பூராவும் இந்தத் தோட்டங்களில் செழித்துக் குலுங்கும். எந்தநேரமும் தோட்டக்காரர்களும், டிரக்டர், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களின் ஒலியும் பார்க்கவும், கேட்கவும் சந்தோஷமான சங்கதிகள். இவை காசு பயிராகும் தோட்டங்கள். இப்போ தரிசுதட்டிக் கிடக்கும் வெளிகளாய் மாறிவிட்டன, இராணுவ நடவடிக்கைகளால். தோட்டத்தில் கூலிவேலைசெய்தாலும் கைநிறையக் காசு புழங்கியதே. பழைய வாழ்க்கையை அசைபோட்டாலே சந்தோஷமாகவும், அதேநேரம் ஏக்கமாகவும் இருக்கிறது.

தோட்டங்களையொட்டிய ஒழுங்கைகள் ஊடாகச் சைக்கிளை மிதித்தான். நல்லவேளை இந்த ஒழுங்கைகளுக்குள் இராணுவம் அதிகம் வருவதில்லை. யாழ்ப்பாணத்தில், பிரதான வீதிகளைச் சுற்றி இடியப்பச் சிக்கலாய் ஓடும் ஒழுங்கைகள் போராட்டத்தின் ஜீவநாடி. போராளிகளும், சனங்களும் போக்குவரத்துக்கு நம்பியிருப்பது இந்த ஒழுங்கைகளைத்தான். எந்த நாட்டு இராணுவம் வந்து மறித்தாலும் உச்சி, ஓடிக் கிளித்தட்டு விளையாட்டுப்போல் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

இதோ, இந்த ஒழுங்கையின் வளைவில், பிரதான வீதிக் கடவை தெரிகிறது. எதிர்ப்பக்கம், இதேநேருக்கு இணுவிலுக்குள் செல்லும் அடுத்த ஒழுங்கை. இன்னும் சரியாய் விடியவில்லை. பிரதானவீதியைக் குறுக்காகக் கடக்க ஒரு இருபது முப்பது அடி அகலம்தான். சைக்கிளை நிற்பாட்டி தலையை மெதுவே நீட்டி வீதியின் இருபக்கமும் பார்வையைச் செலுத்தினான் ' கணநேரத்தில் வீதியைக் கடந்து எதிர்ப்பக்க ஒழுங்கைக்குள் புகுந்தான். மனதில் இப்போது துணிவு பிறந்தது. மீண்டும் இணுவில் ஒழுங்கைகளால் நெருக்கமான குடியிருப்புப் பகுதிகளைத் தாண்டி கந்தசாமி கோவிலைக் கடந்து ஒரு வழியாய் அந்த அரிசி ஆலையை அடைந்தான்.

ஆலையின் பின் ஒற்றைக் கதவு வழியே உள்ளே நுழைந்தபோது, தன்னைப்போலவே, இந்த ஊரடங்குச் சட்டமுள்ள அதிகாலையில் அரிசிக்காக ஒரு கூட்டம் கூடியிருப்பதைக் கண்டான். கூட்டத்தில் கலந்து, முண்டியடித்து மூன்று மணிநேரம் காததிருந்தபின், இருந்த பணத்தில் ஒரு கொத்து அரிசி கிடைத்தது. இந்த சூழ்நிலையில் இந்த ஒரு கொத்து அரிசி வாங்கியது பெரியசாதனைதான்.

வாங்கிய ஒரு கொத்து அரிசிப்பையை தோளில் மாட்டி அணைத்துக் கொண்டபோது, பிள்ளைகளுக்குமத்தியானச் சாப்பாட்டிற்கு வழிசெய்துவிட்ட சந்தோஷம் ஏற்பட்டது. நேரம் பத்து, பத்தரை இருக்கும் போலிருக்கிறது. வெயில் சுள்ளென்று அடிக்கத் தொடங்கிவிட்டது. மீண்டும் சைக்கிளில் ஏறி நம்பிக்கையோடு மிதித்தபோது, மனைவி பிள்ளைகளைப் பார்க்க விரும்பும் வேகம் தெரிந்தது. இன்னும் ஒரு இருபது, முப்பது நிமிஷங்களுக்குள் வீட்டுக்குப் போய்விடலாம். வந்த அதே ஒழுங்கைகள் வழியே தோட்டங்களையும், வீடுகளையும் கடந்து திரும்பி, இதோ நேர் ஒழுங்கைக்கு வந்துவிட்டான். சனசந்தடியின்றி மலைப்பாம்பு

போல நீண்டு வளைவு தெரிகிறது.நேர் எதிர்ப்பக்கம் மீண்டும் அந்தப்பக்க ஒழுங்கை ஓடிவா என்று அழைப்பதுபோல் காத்திருக்கிறது. சைக்கிளில் ஊன்றி இரண்டே இரண்டு மிதியில் பிரதான வீதியைக் கடந்துவிடலாம். நேர் ஒழுங்கைக்குள் புகுந்துவிட்டால் நம்ம ஊர்தான். பயமில்லை. இன்னும் ஐந்து நிமிஷத்தில் வீடு. வீட்டிற்குப் போனதும், சீனியில்லாவிட்டாலும் சரசுவின் கையால் ஒரு பேணி வெறும் தேநீர் குடித்தாலே களைப்புப் போய்விடும்.

ஒழுங்கை முகப்புக்குக் கொஞ்சத் தூரத்திலேயே சைக்கிளை காலூன்றி நிற்பாட்டினான். பிரதான வீதியில் இராணுவ நடமாட்டம் தெரிகிறதா எனக் கூர்மையாய் நோக்கினான். ஒரு நடமாட்டமும் தெரியவில்லை. மெதுவாய் இறங்கி சைக்கிளை உருட்டியவாறே, தோளில் தொங்கும் அரிசிப்பையைச் சரிசெய்து சொண்டான். ஒழுங்கை முகப்பிற்கு வந்து இரண்டுபக்கமும் வீதி வளைவை எட்டிப் பார்த்தான். நல்லவேளை இராணுவ நடமாட்டமே இல்லை. விடியுமுன் கடப்பது அவ்வளவு பயமில்லை. இப்போ நல்லஅவதானம் தேவை. காலை வெயில் ஏறிவிட்டது. பயத்தினால் தொண்டை வரண்டது. எச்சிலை விழுங்கிக் கொண்டான். சைக்கிளில் ஏறி இருந்து காலை ஊன்றியபடியே மீண்டும் இரண்டு பக்கமும் நோட்டம் விட்டான். உடலில் உள்ள வலுமுழுவதையும் ஒன்று சேர்த்து சைக்கிள் கால்மிதியை ஊன்றி ஒருமிதி மிதித்தான். வீதியைக் கடப்பதற்கு சைக்கிள் பாய்ந்தது. இன்னும் ஒரேயொரு மிதி...........

சைவப்பாடசாலை மேல்மாடிப் பரணில், பீடி புகைத்துக் கொண்டிருந்த அமைதிப்படைச் சிப்பாய்களில் ஒருவன் அதோ, வீதி வளைவில் கடக்கும் சுந்தரலிங்கத்தின் சைக்கிளைக் கண்டான். பீடியை எறிந்துவிட்டு, தனது மொழியில் கெட்டவார்த்தைகளால் திட்டிக் கொண்டே, வெறிவந்தவன் போல், சைக்கிளை நோக்கிச் சக்திவாய்ந்த இயந்திரத் துப்பாக்கியை திருப்பினான்.

■




கூட்டல் ஒன்றேதான்
கணித தத்துவத்தின் அரிச்சுவடி
முரண்களைப் புணர்தல்
கழித்த லென்றாயிற்று.
எண்களை சமகூறாய்
சேர்த்திடும் ஆக்கம்
பெருக்கலென்றாயிற்று.
கூட்டத்தில் குழுக்களை
தொகுத்துப் பார்த்தால்
பிரித்தல் லென்றாயிற்று
கழித்தல் ஒன்றேதான்
எங்களின்
தலைவிதி என்றாயிற்று.
ஏனென்றா கேட்கிறாய்?
கவனம்.......

# அரங்கில்...

**K.S.B. யின் நாடகங்கள்**

*நேரத்தைக் கடைப்பிடிப்பதில் தமிழன் சபிப்பட்டவன். இதற்காக யாரையும் தனிமைப் படுத்திக் குறை சொல்வதில் அர்த்தமில்லை. யோக்வூட் நூலகக் கலையரங்கில் நடைபெற்ற மூன்று நாடகங்கள் ஒரு மணி நேரம் தாமதித்து தொடங்கியது பற்றி நாம் பெரிதாய் அங்கலாய்க்க வேண்டியதில்லை.*

*மைக் ரெஸ்ரிங், லைற் ரெஸ்ரிங் போன்ற உள் மேடை விவகாரங்களை மண்டபம் நிறைந்த மக்களின் முன்னால் நடத்திக்காட்டி இருக்க வேண்டியதில்லைதான். என்றாலும் அந்தக்கால ஊர்க்கோவில்களின் வீதி நாடக நிகழ்வுகளை நவீன மேடைகளிலும் நிகழ்த்திக் காட்ட மூத்த கலைஞர் K.S. பாலச்சந்திரன் முன் வருகையில் வாய் பொத்திக் கொள்வதே கலகநாஸ்தி.*

*மூன்று நாடகங்களுக்கும் க.வ.டை K.S.B.யே. முதலாவது நாடகமான "தலைமுறை" யில் அவரே நாயகன். K.S.B ஒரு அற்புதமான நடிகர். இரு கருத்துக்களுக்கு இடமில்லாதபடி மேடையில் இது நிருபணமாகிறது. ஆனால் பிரதியாக்கத்தில் கற்றுக்குட்டிகளின் ஐந்தாம், ஆறாம் தரப் பிரதிகள் முந்திக் கொண்டு போவது கவலைக்குரியது. நெறியாக்கத்திலும் மோசமான நாடகங்களுக்கு இந்நாடகம் முன்னுதாரணம். K.S.B யின் வீட்டுக் கழிவறைக்கு எத்தனை வாயில்கள்? மேடையின் இடப்பக்கத்தால் வோஸ் றூமுக்குள் நுழைபவர் வலப்பக்கத்தால் தலைகாட்டுவார். சில சமயங்களில் முன்திரையை விலக்கிக் கொண்டும் வெளிவருவார்.*

*K.S.Bயின் மகனாக வருபவரின் நடிப்பு வெகு இயல்பு. பிளாஸ்பாக்கில் தன் சிறுவயதுப் பருவத்தை மகன் நினைவு கூரும் போது பின்னணியில் ஒலிக்கும் தந்தை K.S.B குரலில் தெரிகின்ற வயோதிப தளர்ச்சியும், தள தளப்பும் (ஏறத்தாள இருபத்திஐந்து வருடத்திற்கு முன்னைய குரல் வயோதிபத்தின் சாயலிலா கேட்கும்) இயக்குனர் குட்டித் தூக்கம் போட்ட இடங்களில் இதுவுமொன்று. K.S.B யின் மருமகளாக நடித்தவருக்கு காட்சிக்கொரு உடைமாற்றுவதும், சிகை அலங்காரத்தை வித்தியாசப் படுத்துவதும் தான் நடிப்பு என்று சொல்லிக் கொடுத்த மாபாவிகள் யார்?*

*திவ்வியராஜனின் குரல் தேனானது. எந்த மேடையையும் கொள்ளை கொள்வது, இந்த மேடையில் யார் யாரைப் பழிவாங்கினார்கள்? K.S.B திவ்வியராஜனையா அல்லது Viceverse வா?*

*சும்மா சொல்லக் கூடாது. மொழிபெயர்ப்பு நாடகம். "தள்ளுவண்டிக்காரன்". அருமையான பிரதி. நேர்த்தியான மொழிபெயர்ப்பு. ஆழமான நெறியாள்கையில் மேடையேற்றம் கண்டிருப்பின் பரவலாகப் பேசப்பட்டிருக்கும். என்னதான் குரங்கு பிடிக்க முயன்றாலும் வினாயகராகவே முகம் காட்டும் நல்ல நடிகர்களின் திறமைகள் இருந்தும் அந்நாடகத்தின் முழுத் தாக்கத்தையும் வெளிக் கொணரவில்லை என்பதற்கு யார் பாத்திரவாளி?*

*மூன்றாவது நகைச்சுவை நாடகம் பல பிறைகள் கண்டது. நேரம் கடந்து விட்டதால் சில காட்சிகள் வெட்டப்பட்ட நிலையில் மேடையேற்றப்பட்டது. பிரசவநேரம் தாண்டி விட்டதால் குழந்தையின் சில அங்கங்களைச் சிதைத்து நிகழ்ந்த சுகப் பிரசவம்.*

*K.S.B என்ற வைத்தியர் இதையிட்டுப் பெருமைப்பட்டால் நாம் செய்வதற்கு ஏதுமில்லை.*

**ஒரு கொசுறு**

*K.S.B. அண்ணருக்கு,*

*நீங்கள் நடித்து வெளிவர உள்ள "உயிரே உயிரே" திரைப்படத்தின் விளம்பரப் போஸ்ரர்கள் பிரமாதமாக காய்கறிக் கடைச் சுவர்களை எல்லாம் அலங்கரிக்கின்றன. பார்க்கச் சந்தோசமாக உள்ளது. ஆனால் உங்கள் படத்தினில் மூஞ்சையே காட்டாத ஒரு பிரகிருதியை ஒற்றைக்கால் தூக்கிய படி பிரமாதப்படுத்தி இருக்கிறீர்களே, ஒரு விளக்குக் கம்பத்திற்கு முன்னால் அவரை நிறுத்தி இருந்தாலாவது அதற்கொரு அர்த்தமும் அவரின் தகுதியும் புலனாகி இருக்கும். நல்லதொரு அறிமுகத்தை தவறவிட்டு விட்டீர்களே, ஐயா.*

**'மானுட தரிசனம்' அறிமுக அரங்கம்**

*பிரபல எழுத்தாளர் அகஸ்தியரின் அந்திமக் காலத்தில் எழுதிய மானுடதரிசனம்.. இது ஒரு விபரணக் கொத்து. அள்ள அள்ள குறையாத அமுதசுரபி. யாழ்ப்பாணத்து கிராமிய வாடை தவளும் தமிழ். அக்காலத்தில் அவர் தரிசித்த அதீத மானுடங்கள். அம் மண்ணை ஆட்டிப்படைத்த கூட்டுச் சக்திகள். கலைவடிவங்கள்,அவற்றினுடு வெளிவந்த மனிதர்கள் என ஏராளம் ஏராளம்.*

*இந் நூலை கனடாவில் அறிமுகஞ் செய்து வைக்க விளைந்து வெற்றி கண்டவர் 'இலங்கையர்' செல்வரட்ணம் அவர்கள். இடம், பொருள், காலம் உணர்ந்து பொருத்தமான பேச்சாளர்களோடு அடக்கமாக நடைபெற்றது இவ் விழா. திரு. கனகசபாபதி அவர்கள் நூலை அறிமுகஞ் செய்து வைக்க, கவிஞர் அம்பி முகமன் கூற, நூலை மதிப்பீடு செய்தவர்கள் அ.கந்தசாமி, உ.சேரன், ராஜேந்திரன், கலாநிதி பார்வதி கந்தசாமி, பத்மநாதன் ஆகியோர்.*

*எஸ். போ எழுதிய 'நனவிடை தோய்தல்' என்ற நூலோடு பல விடையங்களில் ஒத்துப் போனாலும் கூட அவர்கள் இருவரும் ஒரே காலகட்டத்தில் ஒரே பாசறையில் வளர்ந்தவர்கள் என்பதால் தவிர்க்கமுடியாதது என பலரும் கருத்து தெரிவித்தனர். நல்லதோர் ஆரோக்கியமான விழா இது.*

**'சிறுகதை' பற்றிய கருத்து அ(று)வை**

*எவரிடமிருந்து எதை எதிர்பார்ப்பது! நம்பிக்கையும் அவநம்பிக்கையுமாக கூட்ட அறையுள் நுழைகின்றேன். குத்துவிளக்கேற்றுவதற்காக திரிநூற்பதில் முனைப்போடு சிலர். இருபது பேருக்கு உட்பட்ட கூட்டம். அரங்கம் ஆரம்பமாகிறது. தலைவர் எழுந்து விளக்கேற்றுவோர் பட்டியலைப் படிக்கிறார். ஒரு புறத்தில் அமைப்பாளர், விளக்கில் ஐந்து திரிகளுக்கு மேல் போடமுடியவில்லையே என்ற ஆதங்கத்தோடு. கனடாவின் மிகப்பிரபல விளம்பரப் பத்திரிகையின் "நம்ம படப் பிடிப்பாளர்" புகைப்படங்ளைச் சுட்டுத் தள்ளுகிறார். விளக்கேற்றிய அறிஞர் + தம்பி நடா ராஜகுமார் எங்கோ வேகமாக வெளியேறிக் கொண்டிருக்கிறார். வேறு எங்காவது குத்துவிளக்கேற்ற குத்தகை ஒப்பந்தமாயிருக்கலாம். இப்படித்தான் ஆரம்பமாயிற்று கருத்தரங்கு.*

*உதயன் பத்திரிகையின் சகல அதிகாரங்களும் கொண்ட அதிபர் ஆர். என்.*

லோகேந்திரலிங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அத்தோடு நிறத்தியிருக்கலாம். " இனி நீ எழுதவேண்டும் புதிதாய் பிறக்கும் குழந்தைகளுக்காக வேனும்" என்று ஒருகாலத்தே கவிதை பாடியவர் தற்போது வியாபாரியாகி விளம்பரம் பாடுவது அவலந்தான். அவர்மீது அன்பு கொண்டவர்கள் மாமியாரின் விலகிய முந்தானையைப் பார்த்த வேதனையில்.

குத்தகைத் தலைவர் வி. கந்தவனம் உலகின் பிரசித்தி பெற்ற சிறுகதை எழுத்தாளர்களின் கூற்றுக்களை ஆதாரங்காட்டிப் பேசினார். சிறுகதையின் பரிணாம வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய 'காலம்' செல்வம் தமிழ் சிறுததைகளின் தோற்றப்பாடு -அதன் வளர்ச்சி, அதிலும் சிறுகதைகளின் தோற்றம் அதன் இன்றைய நிலை, புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் சிறுகதைகள் என நீண்ட தெளிவான உரையை நிகழ்த்தினார். இடையே கனேடியச் சிறுகதைகளில் 'நைஜீரிய மூளைசாலிகள்' என்ற ஜோஜ் குருசேவின் கதைபற்றி குறிப்பிட்ட போது தலைவர்கந்தவனம் தேள் கொட்டித் திடுக்கிட்டமை வேடிக்கையாக இருந்தது.

இரா. சம்பந்தன் பேசும் போது தான் சிறுகதை புனையும் முறைபற்றி எடுத்துச் சொன்னார்.

இடையே வந்த உதிரிகள் சில.........

மலையன்பன், முன்னொரு காலத்தே சிறுகதையுலகை ஆண்ட மன்னர்களில் நானும்....... என்பது போல் தொடங்கி சிறுகதைப் போட்டியிலே தான் பரிசு பெற்ற கதை சொன்னார். சபை நெஞ்சை நிமிர்த்தியது. ஒரு நொடிப் பொழுதுதான்....... 'திருவர்' நடத்திய போட்டியில் என்ற உண்மை தெரிந்தபோது பரிசைகெட்டது.

இங்கு 'எள்ளல்' (Cossip) புரிவதற்காகவே சஞ்சிகைகள் பல வருகின்றன என்றார் திருச்செல்வம். பாவம் அவருக்கு அதைவிட்டால் வேறு என்ன, இலக்கியமா புரியும். அவர் போன்றவர்களுக்காகவே சஞ்சிகைகள் அப்படி ஓரிரு பக்கங்களை ஒதுக்குவதை பாராட்டுவோம்.

கவிஞர் அம்பி, சிறுகதை எழுத போதியளவு நேரம் வேண்டும் என்பதால் அதை விட்டு தாம் கவிதை எழுதத் தொடங்கியதாக குறிப்பிட்டார். நாமும் மறுப்பதற்கில்லை. யாப்புக்கு தமிழ் எழுதுவது சுலபந்தான். அதை ஏன் கவிதை எனச் சொல்ல வேண்டும், செய்யுள் அல்லது பாடல் எனலாமே.

கவிஞர் கந்தவனம்குறிப்பிடும் போது கவிதை எழுதுவதை பிரசவம் - வேதனை என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். தனக்கு அப்படி ஏதும் வேதனை ஏற்பட்டதாக தெரியவில்லை என குறிப்பிட்டார்.

அது கவிஞர்களின் வாக்கு மூலம்.

இவர் ஏன் தன் தலையில் போட்டுக் கொண்டார் என்பதுதான் புரியவில்லை.

உளவியல் மேதை பத்மநாதன் சபையில் நீண்ட நேரம் பேசினார்.

சிலர் சிறுகதை எழுதுபவர்களுக்குக் கரு சொன்னார்கள்.

கூட்டம் முடிந்து. பழையபடி வேதாளம் முருங்கையில்......

பத்திரிகையில் படங்கள்; வாய்திறவாதவர்கள் கூட பேசினார்கள் எனச் செய்தி.; உதயன் பத்திரிகைக்கு வரும் கதைகள் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என விளம்பரம். இவைகூடப் பெரிதல்ல.......

கலைவாணி ராஜகுமாரன் ஏதோவொரு பத்திரிகையில் படித்ததாக கொண்டுவந்து வாசித்த கட்டுரையை அவர் கூறிய கருத்தாக பிரசுரம்.

இப்படி பல தூண்டில்கள்.

மண்ணில் விதை வீசுபவன் கூட மண்ணின் தன்மை அறிந்து தான் வீசுவான் - எழுத்தாளன் மட்டும் ஏமாளியா!

# ஆர்த்தரவின் பதிவு

அம்மாடியோவ்!
ஒரேநாளில் எழுபது திருமணங்கள்.
இத்தனையும் செப்டம்பர் 6ஆம் நாளில்
ரொறன்ரோ நகரில் நடைபெற்றது.
ஒரு திருமணம்:
இந்து மணமகன் கத்தோலிக்க மணமகளை காதலிக்க விளைந்த விழா.
காலையிலே திருமணத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மோதிரம்மாற்றி
கைப்பிடிக்கப்பட்ட மணவிழா,
கத்தோலிக்கத் தேவாலயத்தில் நடைபெற்றது.
சடங்குகள் யாவும் மதவிதிகளுக்கமைய
ஒழுங்குடன் நடைபெற வீடியோ,
கமெராக்கலைஞர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் நின்று
படங்களைச் சுட்டுத்தள்ளினர்.
மாலையிலே மணவறையோடு கூடிய திருமணமண்டபத்தில் ஓமத்தீ
கொழுந்துவிட்டெரிய சைவக்கலாசாரப்படி நடைபெற்றது மங்கலநாண் பூட்டுவிழா.
இங்கு சர்வாதிகாரியாரென்பதை அறிவீர்களா!
ஐயர் அல்ல, மதவிதிகள் அல்ல,
கமெரா, வீடியோகமெராக்கருவிகள் மட்டுமே.
சுபநேரத்தில் மணமகன் வந்து மணவறையில்
காத்திருக்க ஐயர்
வீடியோகாரனுக்காகக் காத்திருந்தார்.
அவன் தன்தண்டு தடவாளமெல்லாம் பூட்டி 'ஓக்கே" காட்டியபின்தான் சடங்குகளே
ஆரம்பமாகியது.
இது திருமணவீட்டார் மீது ஐயர் கொண்ட கரிசனை அல்ல.
மதச்சடங்குகள் கூட்டுவியாபாரிகள் கையுள் சிக்கிவிட்ட துயரம்.
நாமெல்லாம் நவீனதொழில் நுட்பத்திற்கு அடிமையாய்
போய்விட்ட அவலம்.
தன்கூந்தலில் எப்புறத்தில் பூச்சூடவேண்டுமென்பதை வீடியோக்காரனிடம்
கேட்கின்றாள்
ஆராத்தித்தட்டோடு நாரிமணியொருத்தி.
கேக் வெட்டியபின் மோதிரம் மாற்றுவதா
மோதிரம் மாற்றியபின் கேக்வெட்டுவதா-
மணமக்கள் ஐயரிடம் கேட்க ஐயர் படப்பிடிப்பாளரைச் சுட்டுகிறார்.
இப்போதெல்லாம் மணமகள் கூறைமாற்றச்
செலவிடும் இடைநேரத்தை நிரப்ப
நடனம் புகுத்தப்படுகிறது.
கலாச்சாரச் சடங்கொன்றில் எங்கள் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற
நடனமென்றால் பாராட்டவேண்டியதொன்றே.
இதுவோ மின்னலடிக்கும்

மின்சார வெளிச்சத்துக்குள் உள்ளாடைகள் தெரிய அரைகுறையுடையோடு
வேற்று நாட்டவரால் நடாத்தப்படுகின்ற களியாட்டநடனம்.
இவைகளும் இக்கூட்டு வியாபாரிகளின்
கைங்கரியந்தான்.
திருமணத்தோடு மட்டும் கமெரா, வீடியோ ஆக்கிரமிப்பு நின்றுவிடவில்லை.
அதற்கப்பாலும்
பூப்புநீராட்டுவிழா, கலைவிழாக்கள், சுற்றலாக்கள் எனத்தொடர்கிறது.
சுற்றுலா நிகழ்வொன்றின்போது, ஒரு குடும்பத்தினர், படகொன்றை ஒருமணிநேர வாடகைக்கமர்த்தினர்.
ஒரு மணிநேரம் இவர்கள் பொழுது ஜாலிதான் என எண்ணியிருக்க
ஐந்து நிமிடங்களுக்குள் படகை திரும்ப ஒப்படைத்தனர்.
ஏனென வினாவியபோது படமெடுத்தாயிற்றே!
எனப் பதில் கிடைத்தது.
வீடியோக்கலைகள் புலம் பெயர்ந்த பூமியில் புதிய பரிமாணம் காண்பது
இளங்கறுவல் கண்ணில் படவில்லையா!
உங்கள் ஆதங்கம் புரிகிறது.
வீடியோக்கலைப் படைப்புகள்
ஆரம்பித்திருப்பதென்னவோ உண்மைதானெனினும்
புதிய அவலங்களல்லவா தோன்றியிருக்கின்றது.
இந்தியப்பாணியில் வெள்ளித்திரைக்கு பூஜை போடுவதுபோல
வீடியோத்திரைக்கு பூஜைபோட்டு
சூரியன் பத்திரிகையில்
படம் போட்டதோடு மரணமாய்ப் போனது ஒரு படம்.
ஆஹா, மரணப் படுக்கைக்கும்
ஒரு மந்தைக் கூட்டத்திற்கும் என்னே பொருத்தம்.
பூஜைபோட்டு சீ-டி வெளியிட்டு
வெறும் மேடைப்பேச்சோடு காணாமல்போனது
பிறிதொரு போராட்டம்.
சினிமாபாடலுக்கு இந்திய நடிகைகள் ஆடியது போதாதென்று
நம்மவரை ஆடவைத்தது ஒன்று. அதைப்பார்த்து 'ஜொள்ளு' விட
ஒரு கூட்டம். கூட்டத்தின் பேச்சிலே மயங்கி நுனிப்பாசியினின்று
இந்திய வாடையில் பிதற்றுகின்றது
வீடியோ பெட்டியொன்று. ஒட்டு மொத்தத்தில்
இவர்களெல்லாம் இந்தியச்சினிமாவின்
எச்சிலிலை நாய்களாய் தோன்றுவதே
இன்றைய அவலம்.
எங்கள் ஊரைத் தின்றது நவீனபடைக் கருவிகள்.
பண்பாட்டை ஏப்பம் விடுகிறது வீடியோக்கருவிகள்.
"அவன் உயிரைக் கொன்றான்.
இவன் ஆன்மாவைக் கொன்றான் நான் பாசானேன்"
சேரனின் பொருத்தமான கவிதையடிகள் இவை.
இவற்றுக்கிடையே நம்பிக்கை தருவது போல் பி. விக்கினேஸ்வரனின் 'அழுத்தங்கள்' ஒன்று. அண்மையில் பாரிஸிலிருந்து வந்த "முகம்" மற்றொன்று. இந்த வித்துக்கள் நாளை விருட்சமாகட்டும்.
காஞ்சோண்டிகளை அழிப்போம். பனங்கொட்டைகளை விதைப்போம்.

**SABONA**
OF LONDON

*Design*



மருத்துவக் கையணி

**More than a copper bracelet**
(416) 269-8151

# LAW OFFICES



## யசோ சின்னத்துரை

பரிஸ்டர், சொலிஸ்டர் மற்றும் நொத்தாரிஸ்

## YASO SINNADURAI

Barrister & Solicitor, Notary Public

SCARBOROUGH OFFICE
2555, EGLINTON AVE E . SUITE 204
SCARBOROUGH . ON . M1K 5J1
(EGLINTON at MIDLAND)
TEL: (416) 265 3456
FAX: (416) 265 2770

MISSISSAUGA OFFICE
3038 HURONTARIO ST . SUITE 203
MISSISSAUGA . ON . L5B 3B9
( NORTH of Hwy 5 on Hwy 10)

TEL: (905) 306 1100
FAX: (905) 306 0594

COVER DESIGN: DIG GRAPHICS & STUDIO